We Excel in
Bridal Dressing
For Hindu & Christian
Weddings
YOGI
Beauty Parlour
71, Nayanmar Veethy,
Kachcheri Nallur Road,
Nallur,
Jaffna.

பக்கங்கள் ஆறு


Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

இந்து, கிறிஸ்தவ
மணப் பெண்களை
நவீன முறையில்
அலங்காரம் செய்யவும்
Facial Bleaching,
Eyebrow Shaping
Waxing and Hair Cuts
செய்து கொள்ளவும்
YOGI
BEAUTY PARLOUR
(ONLY LADIES)
71, நாயன்மார் வீதி,
நல்லூர்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 21 ஞாயிற்றுக்கிழமை (05 - 03 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 98



உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் யுத்தக் கைதிகள் நான்காவது நாளான நேற்று மிகவும் சோர்வுற்ற நிலையில் படுத்த படுக்கையில் கிடக்கும் காட்சி. (ஐ)
படங்கள்: எஸ். ராஜ்குமார்

# பேச்சுக்கள் தோல்வி கண்டால் போருக்குத் தயாராக வேண்டும்

## இராணுவத்தை உஷார்ப்படுத்துகிறார் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த

கொழும்பு, மார்ச் 5

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வி காணும் பட்சத்தில் —

எமது படைகள் போருக்குத் தயாராக இருக்க வேண்டும்!

அத்தகைய ஒரு கட்டம் உருவானால், ஆயுதப்படைகளுக்கு என்னென்ன தேவைப்படுகின்றனவோ அவை அனைத்தையும் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

இவ்வாறு இராணுவத்தினரை உஷார்ப் படுத்தியிருக்கிறார் பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த!!

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று மட்டக்களப்புப் பகுதியில் உள்ள இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் இப்போது எவ்வாறு உள்ளன என்பதனை அறிவதும் அமைச்சரின் விஜயத்தின் ஒரு நோக்கமாகும்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

### செஞ்சிலுவை அதிகாரிகள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், மார்ச் 5

உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் யுத்தக் கைதிகளை—நான்காவது நாளான நேற்று — செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு பிரதிநிதிகள் சென்று பார்வையிட்டனர். (ஐ-9)

### முச்சந்தி முரசு



பழைய பல்லவி பாடத் தொடங்கி விட்டினம் பாருங்கோ......!

## படுக்கையை விட்டு எழுந்திட முடியா நிலையில் கைதிகள்

### நான்காம் நாளாக உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

உண்ணாவிரதத்தின் நான்காவது நாளான நேற்று யுத்தக் கைதிகள் அனைவருமே படுத்த படுக்கையாகக் காணப்பட்டனர்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் அவர்களைச் சந்தித்த சமயம் அவர்களில் எவராலுமே எழுந்திருக்கமுடிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சந்திரிகா இன்று திருமலை விஜயம்

கொழும்பு, மார்ச் 5

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க, பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த சகிதம் இன்று கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொள்கிறார்.

திருகோணமலையில் மாதிரி விடமைப்புத் திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்து வைப்பார்.

இவர்களின் விஜயத்தையடுத்து திருகோணமலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. [இ-3]

### லலித் கொலை; சந்தேக நபர் தப்பிவிட்டாராம்

கொழும்பு, மார்ச். 5

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் கொலைச் சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலை கிட்டும் என்று நம்பினோம் அரசின் மௌனம் ஏமாற்றம் தருகிறது

### யுத்தக் கைதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5

தெற்கில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு சந்திரிகா அரசு பதவிக்கு வந்ததும் எமது விடுதலை நிச்சயமாகும் என நம்பினோம். ஆனால் பல மாதங்கள் கடந்த பின்பும் எம்மை விடுவிக்க அரசு எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் இதுவரை எடுக்காமல் மௌனம் சாதிப்பது எமக்கு ஏமாற்றம் தருகிறது.

—உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள யுத்தக் கைதிகளில் ஒருவரான கான்ஸ்டபிள் டி. ஜி. தர்மவர்த்தன முன்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த முதலாம் திகதி முதல் நீராகாரம் மட்டும் அருந்தி உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் 15 பொலீஸாரையும், ஒரு இராணுவச் சிப்பாயையும் நேற்று முற்பகல் சந்தித்த சமயம் கான்ஸ்டபிள் டி. ஜி தர்மவர்த்தனா இதனைத் தெரிவித்தார்.

அவர்களில் ஒருவரான அம்பாறையைச் சேர்ந்த கான்ஸ்டபிள் பி. என் குமார என்பவரை சந்தித்த சமயம் அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு ஆங்கிலத்தில் கடிதம் ஒன்றை எழுதிக்கொண்டிருந்தார்.

அது குறித்து அவரிடம் கேட்டதற்கு —

எத்தனையோ கடிதங்களை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சு தோல்வி அடையவில்லை தற்காலிகமாக மந்தநிலையே ஏற்பட்டுள்ளது

### சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச். 5

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வி அடையவில்லை. தற்காலிகமாக ஒரு மந்தநிலையே ஏற்பட்டிருக்கிறது. இதை ஒரு இடைக்கால தடையாக நினைத்து சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்து செல்லவேண்டும் இதற்கான முயற்சிகள் தொடர்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களின் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை, மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றின் உறுப்பினர்கள் கட்சியின் அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

இந்த வைபவத்தில் தொடர்ந்து பேசிய ஜனாதிபதி கூறியதாவது;-

சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வி அடையவும் இல்லை, அதில் பின்னடைவு ஏற்படவும் இல்லை பேச்சுவார்த்தையில் தற்காலிக மந்த நிலையே ஏற்பட்டிருக்கிறது.

இந்த பேச்சுவார்த்தையில் எமக்கு வெற்றி கிடைத்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இதுவரை தனி தமிழீழ கொள்கையைக் கடைப்பிடித்து வந்தனர். அண்மையில் யாழ்ப்பாணத்தில் பேசிய புலிகளின் அலோசகர் அன்ரன் பாலசிங்கம் சமஷ்டி ஆட்சி முறையை பரிசீலிக்கத் தயார் என்று கூறியுள்ளார். இது எமக்கு கிடைத்த வெற்றி எனலாம்.

வெளிநாடுகளில் பல கெரில்லா இயக்கங்கள் இயங்கி வந்தன. அவவாறான கெரில்லா இயக்கத்தினர் அரசியல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பெண், இரு புதல்வர்கள் சென்னையில் கைது

விடுதலைப் புலிச் சந்தேக நபர்களான 9 பேர் சென்னைச் சிறையிலிருந்து தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பாக சென்னையில் வசித்து வரும் 60 வயது பெண் ஒருவரும், அவரது இரண்டு புதல்வர்களும் இந்திய காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை புறநகர்ப் பகுதியான முகப்பேறில் அந்தப் பெண்ணின் வீட்டை சோதனையிட்டபோது அங்கு ஒரு லட்சம் ரூபா பணம் இருந்ததாகக் காவல் துறையினர் தெரிவித்தனர்.

தப்பிச் சென்றபோது மீண்டும் பிடிபட்ட பாலன் மற்றும் பாலேந்திரன் ஆகியோர் இப் பெண்ணின் வீட்டில் தங்கியிருக்க திட்டமிட்டிருந்ததாக சென்னையில் காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதனிடையில், கூவம் ஆற்றினருகே கண்டுபிடிக்கப்பட்ட உடல் தப்பிச் சென்ற விடுதலைப்புலி சந்தேக நபருடையதே என்று, கைரேகைகளை சரிபார்த்ததன் மூலம் பாலன், பாலேந்திரன் ஆகியோர் கூறியிருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## பூந்தமல்லி நீதிமன்றத்தை தாக்க புலிகள் திட்டமாம்

ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணைகள் நடைபெற்று வரும் பூந்தமல்லி விசேட நீதிமன்றக் கட்டடத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தக்கூடிய சாத்தியம் இருப்பதாக அக்கொலை தொடர்பாக விசாரணை நடத்திய விசேட ஆணைக்குழு அச்சம் வெளியிட்டுள்ளது.

சென்னை மத்திய சிறையிலிருந்து தப்பிச்சென்ற விடுதலைப் புலிச்சந்தேக நபர்களே தாக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## பூநகரி முகாம் தவிர்ந்த ஏனைய பிரச்சினைகளை பரிசீலிக்க அரசு தயார்

### சிரேஷ்ட அரச அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 5

பூநகரி இராணுவ முகாமை அகற்றுவதைத் தவிர, அரசாங்கம் விடுதலைப் புலிகள் விடுத்துள்ள கோரிக்கைகளை நிராகரிக்கவில்லை.

சிரேஷ்ட அரச அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கடந்த வியாழன் வெளியான த ஐலண்ட் நாளிதழ் முன் கண்ட செய்தியை வெளியிட்டுள்ளது.

மீன் பிடிக்க அனுமதிக்கப் பட்டுள்ள பிரதேசத்தை மேலும் விஸ்தரிப்பு — யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ள ஆ[illegible] செயலகத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் நியமிப்பது ஆகியன குறித்து பரிசீலிக்க அரசு தயாராகவிருப்பதாக சிரேஷ்ட அரச வட்டாரங்கள் தெரிவித்தன என் த ஐலண்ட் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஏ)

## பல்கலைக்கழக அனுமதி முறையை எதிர்த்து புதனன்று நகரில் பேரணி!

### பாதிக்கப்பட்ட மாணவர் குழு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச். 5

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கும், கிழக்கு பல்கலைக் கழகத்துக்கும் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை — கடந்த இரு கல்வி ஆண்டுகளில் செய்யப்பட்டது போன்று — இம்முறையும் வெற்றிடங்கள் முழுவதையும் நிரப்பாதவகையில் மட்டுப்படுத்தியதை ஆட்சேபித்தும்—

மேற்படி இரு பல்கலைக் கழகங்களிலும் உள்ள வெற்றிடங்கள் முழுவதையும் நிரப்பும் வகையில் மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று கோரியும்—

பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை கண்டனப் பேரணி ஒன்றை யாழ். நகரில் நடத்தவுள்ளனர்.

அன்று காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக் கழகத்தில் இருந்து பேரணி ஆரம்பமாகி யாழ். செயலகத்தை சென்றடையும்.

1994 - 95 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியால் பாதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வெட்டுப்புள்ளி விவகாரம்

## யாழ். மாணவர்கள் குழு கொழும்புக்குச் செல்லும்

யாழ்ப்பாணம், மார்ச். 5

1994 - 95 ஆம் ஆண்டுக்கான பலகலைக்கழக அனுமதிக்குரிய வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்ட மாணவர்களின் குழு ஒன்று இம்மாதம் 18 ஆம் திகதி கொழும்பு சென்று கல்வி உயர்கல்வி அமைச்சின் உயரதிகாரிகளை சந்திக்கவுள்ளது.

ஒவ்வொரு துறையில் இருந்தும் இரு மாணவர்கள் என்ற ரீதியில் எட்டுப் பேர் இக்குழுவில் இடம்பெறுவர்.

தமக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து மேற்படி மாணவர் குழுவினர் கல்வி உயர்கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு நேரில் எடுத்துக் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தத்துவஞானிகள் வரிசையில்

# சிறப்புற்று விளங்கும் வள்ளுவர்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றார் பாரதியார். வள்ளுவர் தந்த திருக்குறள் பலராலும் போற்றப்பட்டு வருகின்றது. திரு என்பது யாவரும் விரும்பும் தன்மை. குறள் என்பது குறுமை. குறுமையெனும் பண்புப்பெயர். குறள் என்பது கருவியாகுபெயராய் நூலையுணர்த்தித் திரு எனும் அடை மொழி கொண்டமையால் திருக்குறள் ஆயிற்று. அது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. திருக்குறள் தந்த திருவள்ளுவரின் பெருமை அளப்பரியது தமிழ் மக்களால் மட்டுமன்றி அனைத்து உலக மக்களாலும் போற்றுதற்குரியது.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி" "நாலும் இரண்டும் சொல்லிற்குறுதி" என வழங்குதலாலும், "பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்" என்ற ஔவையார் வாக்காலும், டாக்டர் போப் ஐயரவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருப்பதாலும், திருக்குறளின் அருமையும் பெருமையும் பேசப்படுகின்றது.

திருக்குறளுக்கு உரை வகுத்தவர் பதின்மர் என தனிப் பாடல் ஒன்று கூறுகிறது.

"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லை யுரை கண்டாரிவர்" என்பதாகும்.

இதனை ஏழில் ஒன்றாக நல்வழிப்பாடல் காட்டுகின்ற தன்மையைப் பாருங்கள்.

"தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசக மென்றுணர்" என்பதே இது.

இன்னுமொரு பெரியார் குறள் ஆறில் ஒன்று என மொழிந்தார் அதுவே இது.

"வள்ளுவர் சீரன்பர் மொழி வாசகந் தொல்காப்பியமே
தென்னுபரி மேலழகன் செய்தவுரை— ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகுசித்தியோராறும்
தண்டமிழின் மேலாந்தரம்

மேலும் நான்கில் ஒன்றாகவும் இதனைக் கருதி உருகினார் இன்னொருவர். அவர் எதிர்மறை முகத்தினாற் சிறப்பித்த நூல்கள் நான்கு சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், பெருங்கதை, திருக்குறள் இவற்றுள் திருக்குறள் முடியாக மிளிர்கிறது.

பாடல் இதோ:

"திருத்தக்கமாமுனிசிந் தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம் – உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக் கூறேம் குறளனுகேம்
எங்கெழி லென்ஞாயி றெமக்கு"

இன்னும் இத்திறன் படைத்த குறளை மூன்றில் ஒன்றாக இலக்கணக்கொத்துடையார் பாராட்டுகின்றார். "தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார் மூன்றினும் முழங்கும்" என்பதே அது. இவர் கூறும் மூன்று நூல்களிலும் குறளே நடுநாயகமாக விளங்குகின்றது. இன்னும் இரண்டில் ஒன்றாகவும் "நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" எனும் வாக்கியங்களால் காட்டப்படுகின்றது. திருக்குறளைத் திருவள்ளுவ மாலை வேதத்தைப் போன்றதென்றும், மூவேந்தர் முடியிற் சூடும் மாலை போன்றதென்றும், முப்பாலில் நாற்பால் மொழிவதென்றும் பாராட்டப்படுகின்றது.

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் எனப்பலராலும் பாராட்டுப் பெற்ற வள்ளுவர் தந்த குறளை அடியொற்றியே பின்வந்த புலவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் அருமையாகக் கையாண்டுள்ளார்கள். திருவள்ளுவர் புலவர்கள் பால் பெருமதிப்பும் அன்புங் கொண்டிருந்தார் என்பதைத் தன்குறளிலேயே மிகத் திறனாகக் காட்டியுள்ளார்.

"உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்னும் குறளில் இக்கருத்தைக் காணலாம்.

திருவள்ளுவர், புலவர்கள் வறுமையில் வாடுவதை அடியோடு வெறுத்தார். வேதவழக்கொடு இயைந்த பல செய்திகள் திறக்குறளில் உள்ளன நித்திய நைமித்திய பூசைகள், நான்கு ஆச்சிரமம், ஐவகைக் கடன்கள், அந்தணர் முதலியோர் ஒழுக்கம், வேதம் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளும் உண்டு இசைச் செய்திகளும் குறளில் உண்டு. கூத்தும் உண்டு. வைத்தியமும் உண்டு

திருவாசகம், திருமந்திரம், சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி கம்பராமாயணம், பாரதியார் வரை வள்ளுவரின் உரையைக் கரைபுரளக் கையாண்டிருக்கிறார்கள். சிலப்பதிகாரத்தில் வரும் அற உரைப்பகுதியில் வள்ளுவரின்

"அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க, மற்றது
பொன்றுங்கால் பொன்றாத்துணை"

என்பதை நினைத்த இளங்கோவடிகள், மாடலன் வாயிலாக அழியாத் தன்மை வாய்ந்த அறத்தினை இன்றே செய்தல் வேண்டும் நாளை செய்வோம் என்றிருத்தல் ஆகாது. ஏனெனில் "நாளைச் செய்குவம் அறம் எனில் இன்றே

கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்
இதுவென வரைந்து வாழு நாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகில் முழுவதும் இல்லை"

என்று சிலப்பதிகாரம் விளக்குகின்றது.

கணவனே தெய்வம் எனக் கொண்ட கற்புடைமாதர் 'பெய்' என்றால் மழை பெய்யும் என்று திட்பமாகக் கூறினார் திருவள்ளுவர். மணிமேகலையைத் தந்த சாத்தனார் திருவள்ளுவரை என்றும் மதித்தவர். வள்ளுவரைப் "பொய்யில் புலவன்" என்றும் அவர் வாய்மொழியைப் பொருளுரை எனப் புகழ்ந்தவர். அதனால் வள்ளுவர் சொல்லி வைத்த

"தெய்வம் தொழஅள் கொழு நன் தொழுதுஎழுவாள்
பெய் யெனப் பெய்யும் மழை"

என்பதை அடியொற்றி

"தெய்வம் தொழாஅள்கொழு நன்தொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப் -
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"

என்று மணிமேகலையில் வலியுறுத்துகின்றார்.

மேலும், சிந்தாமணியில் அமைச்சர் கடமையை வலியுறுத்த வந்த ஆசிரியர் வள்ளுவர் கூறிய,

"அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்"

என்பதை நினைக்கிறார் அரசன் தடுமாறுகையில் அறிவுரை கூறுவது அமைச்சர் கடமை. நிமித்திகன் என்பவனும் ஓர் அமைச்சன். அவன் அரசன். அவன் சொல்லைக் கேட்க மறுத்த போதும் உறுதியுடன் நிமித்திகன் வாயிலாகச் சிந்தாமணி ஆசிரியர் கூறுகின்றார்.

**—சைவப்புலவர் பொன் தெய்வேந்திரம்—**

"மூரித்தேன் தாரினாய் நீ முனியினும் உறுதிநோக்கிப்
பாரித்தேன் தரும நுண்ணூல் வழக்கு அது ஆதல் -
கண்டே"

மேலும், கம்பராமாயணத்தில் பெற்றோர் இன்பத்தை விளக்குகையில் கம்பர் வள்ளுவரை நினைத்தார். போலும் நெடுங்காலம் பிள்ளையின்றி வருந்திய தசரதன், வாழையடி வாழையாக வந்த பெருங்குலம் தன்னோடு வழியடைத்துப் போகுமோ என ஏங்கிய நிலையில் இராமன் உதித்தபோது பேருவகையெய்தினான்.

"மைந்தரை இன்மையின் வரம்பில் காலமும்
நொந்தனன், இராமன் அந்நோவை நீக்குவான்
வந்தனன்" என்பதாகக் கம்பர் அழகாகக் காட்டுகிறார். குறள் கூறும் திறனான கருத்தையே ஈங்கு பொருத்திவிடுகிறார் குறளில்.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்று காட்டப்பட்டுள்ளது

மேலும், சாதி வேற்றுமையை குறளில்

"பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்று வலியுறுத்தப்படுகிறது. மாந்தர் இனத்தில் பிறப்பால் உயர்வு தாழ்வு கூறும் நூல்களை மறுத்து எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும் எனத் திறம்பட உரைத்தார் திருவள்ளுவர். இது "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" எனும் திருமூலர் வாக்கை நோக்கப்புரியும் இதனை ஆதரித்த பாரதியார் எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம் என்று பாடினார். அத்துடன்

"சாதிகள் இல்லையடி பாப்பா — குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்"

என்றும் வலியுறுத்துகிறார். போலித்துறவறத்தைப் பற்றிப் பாடிய வள்ளுவர் "மழித்தலும், நீட்டலும் வேண்டா, உலகம் பழித்தது ஒழித்து விடின்" என்றார். பாரதியாரும்

"காவித்துணி வேண்டா, கற்றைச் சடைவேண்டா
பாவித்தல் போதும் பரமனிலை எய்துதற்கே"

என்றார்.

புதுமைக் கருத்துக்கள் பலவற்றை அள்ளித் தெளித்த வள்ளுவர் உலகச் சிந்தனையாளர்களான சோக்கிரடீஸ் சர்வஞ்ஞர் அரிஸ்டாட்டில போன்றோர் வரிசையில் சிறப்புற்று விளங்குகிறார். பல்வகைப் பொதுக்கருத்துக்கள் இவர்கள் மத்தியில் பொருந்தியிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. பொய்தீர் ஒழுக்க நெறியையே உறுதியாகக் கொண்ட குறளின் திறன் அளப்பரியது.

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், மார்ச் 5

பண்டத்தரிப்பு வடலியடைப்பு பாரத்தனை ஐயனார் ஆலய அலங்காரத் திருவிழா நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும்.

இறுதி நாளான 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஐயப்பன் கதை படிப்புடன் திருக்கல்யாணம் நடைபெறும்.

ஏப்பிரல் 2 ஆம் திகதிஞாயிறு மாலை ஐயப்பன் வடலியடைப்பு கிராமத்தின் வழமையான பாதையில் எழுந்தருளுவார். அடுத்த நாள் குளிர்த்தி நடைபெறும். (இ)

★ ★ ★

நல்லூர், பாணன்குளம் நாச்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 நாட்களுக்கு நடைபெறும்.

எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(ஒ-14)

## சங்கானையில் கண் சத்திர சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். றோட்டறிக்கழகத்தின் ஆதரவில் நடைபெறும் கண் சத்திர சிகிச்சை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு சங்கானை அரசினர் வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

சிகிச்சைக்கென ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டவர்கள் இன்று வைத்தியசாலைக்கு வரும்படி கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர். (ஒ-14)

## இராமகிருஷ்ண பிறந்ததின விழா

யாழ்ப்பாணம், மார்ச். 5

வைத்தீஸ்வராக் கல்லூரி — இந்துமாமன்றத்தின் இராமகிருஷ்ண பிறந்த தின விழாவும், சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ சொற்பொழிவு — நூற்றாண்டு நிறைவு விழாவும் நாளை திங்கட்கிழமை காலை 9-15 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி பிரதான மண்டபத்தில் ஆரம்பமாக வுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தாவும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மா. வேதநாதனும் கலந்து கொள்வர். இராமகிருஷ்ண கீர்த்தனைகள், கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறும்.

(ஒ-14)

## விளையாட்டு அபிவிருத்தி குழு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

வலி-கிழக்கு வலயத்துக்குரிய வலய விளையாட்டு அபிவிருத்திக் குழுவை அமைப்பதற்கான கூட்டம் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலி-கிழக்கைச் சேர்ந்த சகல விளையாட்டு கழகங்களினது பிரதிநிதிகளை அக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். [ஜ]

## இன்று

யாழ்ப்பாணம், மார்ச். 5

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் தெல்லிப்பளைப்பிரிவு தொண்டர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு பிரிவுக்காரியாலயத்தில் நடைபெறும்.

(ஒ- 15)

## தீவக மக்கள் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், மார்ச் 5

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட ஊர்காவற்றுறை, கரம்பன், நாரந்தனை, சுருவில், புளியங்கூடல், சரவணை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களுக்கான பாதிப்புற்றோர் விவரம் திரட்டும் பணி நேற்று சனிக்கிழமையிலிருந்து நடைபெற்று வருகின்றது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்கள் தமது குடும்ப பதிவு அட்டையுடன் அத்தியடியில் அமைந்துள்ள இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகத்திற்கு வந்து பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஒ-14)


## நூல் வெளியீட்டு விழா

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்

திரு. ச. சத்தியசீலன் அவர்களின்

★ இலங்கை அரசியலில் மொழியும் மதமும்

★ இலங்கை இனப்பிரச்சினையின் பொருளாதார மூலங்கள்

(இரு நூல்கள்)

இடம்: கைலாசபதி கலையரங்கம் (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)

காலம்: 06 – 03 – 1995 திங்கள் பிற்பகல் 4.00 மணி

தலைவர்: திரு. செல்வராஜா ரமேஷ்

நிகழ்ச்சி நிரல்

கடவுள் வாழ்த்து: செல்வி பிரஷாந்தி இராமச்சந்திரன்

வாழ்த்துரை: பேராசிரியர் கே. குணரத்தினம் (துணைவேந்தர், யாழ். பல்கலைக் கழகம்)
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக் கழகம்)

ஆய்வுரை: பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் (தலைவர், பொருளியற்றுறை யாழ். பல்கலைக் கழகம்)
பேராசிரியர் கா. சிவத்தம்பி (தலைவர், நுண்கலைத்துறை யாழ். பல்கலைக் கழகம்)

நூலாசிரியர் உரை

நன்றி: திரு. இராஜரத்தினம் அரிவரசன் (செயலாளர், சமூக விஞ்ஞான மன்றம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சமூக விஞ்ஞான மன்றம்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

விளம்பர அன்பளிப்பு
வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

[சி/718]


## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 – 09 – 1909

மறைவு: 05 – 03 – 1986

அமரர்

### முதலியார் வை. மகேசன் J. P.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த செம்மல்
செய்வன திருந்தச் செய்த செம்மனச் செல்வர்
தெய்வப்பணிகள் பற்பல தேசமோங்கச் செய்தவர்
மண்ணுலகில் ஐயா நீ வாழிநீடு!

தங்கள் பிரிவால் வாடும்;
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர், உறவினர், நண்பர்கள்.

லிங்கவாசா,
நவாலி.

[8368]

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

05 – 03 – 1995



தோற்றம்: 23 – 03 – 1945

மறைவு: 05 – 03 – 1992

### கணபதிப்பிள்ளை சண்முகநாதன்

[வண்ணையூர் சண், உடுவையூர் சண்]

அன்போடு அறிவூட்டி பண்புள்ளம் நாம் பயில
எண்ணங்கள் தந்தெம்மை இதமாக வாழவைத்த
தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மகள்: ச. கலையரசி
மருமகன்: த. சந்திரன்
மற்றும்
உற்றார், உறவினர்கள்.

மல்வம்,
உடுவில்.

(35514)


உ

இணுவில்

## சிவகாமி அம்மன் கோயில் மஹோற்சவ விழா

மாசி 22 ஆம் நாள் [06 – 03 – 95] திங்கள் காலை 10-00 — 10-15 மணி கொடியேற்றம்

11 – 03 – 95 சனி மஞ்சம்
13 – 03 – 95 திங்கள் கைலாசவாகனம்
14 – 03 – 95 செவ்வாய் குதிரைவாகனம்
15 – 03 – 95 புதன் சப்பறம்
தேர் 16 – 03 – 95 வியாழன் காலை 7-00 மணி
தீர்த்தம் 17 – 03 – 95 வெள்ளி காலை 8-00 மணி

பிரதம குரு
சிவஸ்ரீ சாம்பசிவசோமசபேசக் குருக்கள்
(இணுவில்)

தினசரி இரவு 8.00 மணிக்கு
திரு. ஆறு. திருமுருகன் B.A அவர்கள்
வழங்கும்

இராமாயணம்
தொடர் சொற்பொழிவு

அன்பளிப்பு:

கலா அழகுக் களஞ்சியம்
65, காங்கேசன்துறைச் சாலை,
யாழ்ப்பாணம்.

[35512]



பண்டத்தரிப்பு-வடலியடைப்பு
பாரத்தனை ஐயனார் ஆலய

## 1995ஆம் ஆண்டு அலங்காரத் திருவிழா

ஐயப்பன் அடியார்களே!

வடலியடைப்பு பாரத்தனையில் எழுந்து அருள்பாலிக்கும் ஐயப்ப சுவாமியின் அலங்காரத்திருவிழா

இவ் ஆண்டு மாசித் திங்கள் 22ஆம் நாள் (06-03-1995) திங்கட்கிழமை

ஆரம்பமாகி 12நாட்கள் தொடர்ந்து நடைபெறும். தினமும் காலை 9மணிக்கு திருமுழுக்கு (அபிஷேக) ஆராதனைகளுடன், ஆரம்பமாகி மாலை 5மணிக்கு சிறப்புப் பூசையுடன் பண்ணிசை, சொற்பொழிவு என்பன நடைபெறும். பின்னர் ஐயப்பன் வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள் தருவார். இறுதி நாளன்று 17—03—1995 வெள்ளிக்கிழமை ஐயப்பன் கதை படிப்புடன்; திருக்கல்யாணம் நடை பெறும்.

02-04-1995 ஞாயிறு மாலை ஐயப்பன் வடலியடைப்பு கிராமத்தின் வழமையான பாதையில் எழுந்தருளி ஊர்மக்களுக்கு அருள் பாலிப்பார். 03-04-1995 திங்கட்கிழமை குளிர்த்தி நடைபெறும்.

இந் நிகழ்வுகளில் பங்கு கொண்டு ஐயப்பன் அருள் பெற்று பயன் அடையுமாறு இடம் பெயர்ந்த மக்களையும், ஊரில் வதியும் மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயப்பன் ஆலய
பரிபாலனசபை.

வடலியடைப்பு.
05-03-1995.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாலியாவில் ஏற்பட்டுள்ள தோல்வி ஐ. நாவுக்கு பெரும் பின்னடைவு!

சோமாலியாவில் இருந்து ஐ. நா. படைகள் முற்றாக வெளியேறி உள்ளன.

தற்போது சோமாலிய ஆயுதக் குழுக்கள் மத்தியில் இரு தெரிவுகள் மட்டுமே விடப்பட்டுள்ளன.

ஒன்று சமாதானப்பேச்சுக்களை ஆரம்பித்து அரசியல் தீர்வு காண்பது—

மற்றது மீண்டும் சண்டை நடத்தி ராணுவத்தீர்வு காண்பது.

சோமாலியாவில் இரு பிரதான ஆயுதக் குழுக்கள் மத்தியில் சண்டை நடைபெற்ற போது அங்கு சட்டம், ஒழுங்கை நிலை நாட்டி அரசாங்கம் ஒன்றை இயங்க வைக்கும் நோக்கத்துடனேயே ஐ. நா. தலையிட்டது.

ஐ.நா.படைகள் தற்போது சோமாலியாவிலிருந்து வெளியேறியுள்ள சமயம் சோமாலியாவை முன்னர் இருந்ததை விட மோசமான நிலையிலேயே விட்டுச் சென்றுள்ளன.

ஐ. நா.வின் முயற்சிகள் — நோக்கங்கள் சோமாலியாவைப் பொறுத்த வரைபடு தோல்வியில் முடிந்துள்ளன. ஆயிரக்கணக்கான கோடி ரூபாக்களைச் செலவிட்டு, சோமாலியாவில் தனது வீரர்களையும் இழந்த பின் ஐ.நா.படைகள் வெற்றிகரமாகப் பின் வாங்கியுள்ளன

### 30ஆயிரம் பேர் கொண்ட ஐ.நா.படை

சோமாலியாவில் பட்டினி நிலையை நீக்குவதற்கும்—

போட்டி ஆயுதக் குழுக்களுக்கிடையிலான சண்டையை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும்—

அரசாங்கம் ஒன்றை இயங்க வைப்பதற்கும் — அமெரிக்கா தலைமையிலான ஐ நா. படைகள் 1992 டிசம்பரில் அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

ஆரம்பத்தில் 30 ஆயிரம் பேரைக் கொண்டதாக ஐ.நா படை இருந்தது.

சோமாலியாவில் ஐ.நா. வின் நோக்கங்கள் தோல்வி அடைய ஆரம்பிக்கவே ஐ. நா. படைகளை முற்றாக வாபஸ் பெறும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. ஐ. நா. படை வாபஸ் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வந்தது.

கடந்த வியாழக்கிழமை எஞ்சி இருந்த ஆயிரத்து 500 ஐ. நா. படையினரும் வெளியேறினர்.

இந்த ஆயிரத்து 500பேரையும் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்காக தலைநகர் மொகடிஸுவில் (Mogadishu) ஆயிரத்து 800அமெரிக்கப் படையினரையும் 400 இத்தாலிய படையினரையும் புதிதாக இறக்க வேண்டிய நிலை ஐ. நாவுக்கு ஏற்பட்டது. தற்போது எந்த ஒரு அந்நிய படையும் சோமாலியாவில் இல்லை.

### அமெரிக்க வீரர் முதலில் வெளியேறினர்

கடந்த மார்ச் 31ஆம் திகதியுடன் சோமாலியாவில் இருந்து அமெரிக்கப்படைகள் முற்றாக வெளியேறி இருந்தன.

அதன் பின்னர் பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், மலேசியா போன்ற மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த 19ஆயிரம் படையினர் மட்டும் நிறுத்தப்பட்டிருந்தனர். கடந்த ஒரு

### மக்கள் வெறுப்பை சம்பாதித்ததே ஐ. நா. படைகள் இழைத்த தவறு

வருட காலமாக போட்டி ஆயுதக் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கை எதனையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை.

மோதல்களை தவிர்த்து மொகடிஸுவில் உள்ள துறைமுகம், விமான நிலையம் மற்றும் பாதுகாப்பு வலயங்களைப் பாதுகாக்கும் பணியில் மட்டும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### பூட்ரஸ் பூட்ரஸ் காலி கருத்து

சோமாலியாவில் ஐ. நா. வுக்கு ஏற்பட்டுள்ள தோல்வி ஐ. நாவுக்கு பெரிய பின்னடைவு என்கிறார் ஐ நா. பொதுச்செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ்காலி.

1989-90இல் சோவியத் யூனியன் வீழ்ச்சி அடையும் வரை வல்லரசுகளின் 'ரத்து அதிகாரம்' (Veto) காரணமாக ஐ. நா. ஒரு பயனற்ற சபையாக இயங்கி வந்தது.

சோமாலியப் பிரச்சினை, சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குப் பின்னர் அமெரிக்க ஆதரவுடன் தனது திறனை வெளிக்காட்ட ஐ நாவுக்குக் கிடைத்திருந்த முதலாவது சந்தர்ப்பம் ஆகும்.

ஆனால் சோமாலிய மக்களின் நம்பிக்கையை ஐ. நா. படைகள் பெறத் தவறி இருந்தன. ஐ.. நா. படைகளுக்கு கிடைத்த முதலாவது தோல்வி இதுதான்.

உள் நாட்டு மக்களின் மன நிலையை அறியாது ஆயுதங்களைக் களைய முற்பட்டது ஐ நா. செய்த மிகப்பெரிய தவறு.

### 132 ஐ நா. வீரர் மரணம்

சோமாலியாவில் (U. N.

## போட்டி ஆயுதக்குழுக்களின் பலத்தை அதிகரித்தது தான் கண்ட மிச்சம்

Operation in Somalia( U. N. O. S. O. M ) என்ற பெயரில் ஐ நா. படை இயங்கி வந்தது.

சோமாலிய யுத்தத்தில் 132 ஐ. நா. படையினர் கொல்லப்பட்டனர்.

அதேசமயம் நூற்றுக்கணக்கான சோமாலிய குடிமக்கள் ஐ நா. படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் உதவி வழங்கும் தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரும் அடங்குகின்றனர்.

1993 ஜூன் 5ஆம் திகதி ஒரே தாக்குதலில் ஐ. நா. படையைச் சேர்ந்த 25 பாகிஸ்தானியர்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் நடந்து சில தினங்களின் பின்னர் பாகிஸ்தான் படையினர் நடத்திய பதில் தாக்குதலில் 20 சோமாலிய குடிமக்கள் கொல்லப்பட்டனர். மற்றொரு சம்பவத்தில் 30க்கு மேற்பட்ட அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர்.

தாக்குதல் சம்பவங்களாலும் பழிவாங்கும் சம்பவங்களாலும் நூற்றுக்கணக்கானோர் இரு தரப்பிலும் இப்படி உயிரிழந்தனர்.

### முதலில் அமெரிக்காவே தலையிட்டது

ஆரம்பத்தில் சோமாலியாவில் அமெரிக்கா தன்னிச்சையாகவே தலையிட்டது.

சோமாலியாவின் பிரதான ஆயுதக்குழுவான மொஹம்மட் பரா ஐடீட் (Mohammed Farah Aidid) தலைமையிலான ஆயுதக்குழுவினருக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் இடையில் மோதல்நிலை உருவான போது அமெரிக்கா தனது படைகளை வாபஸ் பெற்றது.

பின்னர் அமெரிக்கப்படைகளின் தலைமையில் ஐ. நா. படைகள் அனுப்பப்பட்டன. கிளின்ரன் நிர்வாகமே இவற்றுக்கெல்லாம் முழுப்பொறுப்பு

தற்போது சோமாலிய நிலைமையை மேலும் மோசமாக்கிவிட்டே ஐ. நா. படைகள் வெளியேறி உள்ளன.

முன்பிருந்ததைவிட தற்போது சோமாலியாவில் ஆயுதக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன கொள்ளைகள் அதிகரித்துள்ளது.

ஓர் அரசையோ அல்லது உறுதியான பொலீஸ் படை ஒன்றையே உருவாக்கும் முயற்சியில் ஐ நா. முற்றாகத் தோல்வி அடைந்துவிட்டது. பதிலுக்கு ஐ நாவின் தலையீடு ஆயுதக் குழுக்களை ஓரளவு ஒற்றுமைப்படுத்தி விட்டது எனலாம்.

ஜெனரல் ஐடீட் தலைமையிலான சிறுசிறு ஆயுதக்குழுக்கள் சோமாலிய தேசிய கூட்டணி (Somali National Alliance) ஒன்றை உருவாக்கி உள்ளன.

ஐ. நா.படைகள் சோமாலியாவுக்கு வருவதற்கு முன்னர் இருந்ததை விட தற்போது ஆயுதக் குழுக்கள் பலம் அடைந்துவிட்டது என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வியாழனன்று ஐ.நா. படையின் கடைசிப் பிரிவினர் மொஹடிஸுவிலிருந்துவெளியேறிய சமயம் ஆயுதக் குழுக்கள் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் மற்றும் சக்தி மிக்க ஆயுதங்களுடன் வீதிகளில் காணப்பட்டன.

ஐ. நா. படையினர் வெளியேறியவுடன் ஜெனரல்ஐடீட்டின் படையினர் மொகடிஸு விமான நிலையத்தை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து விட்டனர். இவர்களின் அடுத்த இலக்கு துறைமுகமாக இருக்கலாம்.

### ஜென்ரல் ஐடீட்டைப் பிடிக்கும் முயற்சியினால் உயிரிழப்புக்களே அதிகரித்தன

ஐ. நா. படைகள் வெளியேறிவிட்டதால் சோமாலிய மக்கள் தங்கள் பிரச்சினையைத் தாங்களே இனித் தீர்க்க முடியும் என்று ஜெனரல் ஐடீட் அறிவித்துள்ளார்.

தலைநகர்மொஹடிஸுவின் தென்பகுதி ஜெனரல் ஐடீட்டின் கோட்டையாக இன்னும் இருந்து வருகிறது,

ஜெனரல் ஐடீட்டின்பிரதான எதிரியான மொஹம்மட் அலி மஹ்டி (Mohammed Ali Mehdi) வட பகுதியை தமது

### வெளி உலகில்

படையினரின் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டுள்ளார்.

ஜெனரல் மொஹம்மட் பரா ஐடீட் தலைமையிலான சோமாலிய தேசிய முன்னணியும் மொஹம்மட் அலி மாக்டி தலைமையிலான குழுவினருமே சோமாலியாவின் இரு பிரதான போட்டி ஆயுதக்குழுக்கள் ஆகும்.

1991 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஷியாட்பார்ரேயின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதை அடுத்து இந்த இருபிரதான ஆயுதக் குழுக்களிடையே ஏற்பட்ட சண்டையே சோமாலி நெருக்கடியின் ஆரம்பம் எனலாம்.

ஜெனரல் மொஹம்மட்பரா ஐடீட்டும், மொஹம்மட் அலி மஹ்டியும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முற்பட்டனர் ஆயுதங்களைக் குவித்துக் கொண்டு அவர்கள் சண்டையில் இறங்கினர்.

இந்தச் சண்டையின் போது சோமாலியாவில் அரசாங்க நிர்வாகம் முற்றாகச் சீர்குலைந்தது. உணவு விநியோகம் தடைப்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் இறக்கும் அபாயம் உருவானது. அகதிகள் எண்ணிக்கையும் தினமும் அதிகரித்து வந்தது. அரச நிர்வாகம் முழு அளவில் செயலிழந்த நிலையிலேயே முதலில்அமெரிக்காவினதும், பின்னர் ஐ. நாவினதும் தலையீடுகள் இடம் பெற்றன.

ஜெனரல் மொஹம்மட் பரா ஐடீட்டோ அல்லது மொஹம்மட்அலி மஹ்டியோ ஐ. நா. படைகளை சோமாலியாவுக்கு அழைக்கவில்லை.

### மோதல் நிலையே தோல்விக்கு பிரதான காரணம்

ஐ. நா. படைகளுக்கும், ஜெனரல் ஐடீட் படைகளுக்கும் இடையில் மோதல் நிலை உருவானதே சோமாலியாவில் ஐ. நாவின் பணிகள் தோல்வி அடைய பிரதான காரணம் எனலாம்.

சண்டையில் ஈடுபட்டிருந்த இரு போட்டிக் குழுக்களையும் சமாதானப்படுத்துவதற்குப் பதிலாக இப்போட்டிக் குழுக்களில் ஒன்றான ஜெனரல் மொஹம்மட்பரா ஐடீட் தலைமையிலான குழுவை அழிப்பதற்கு ஐ. நா. படைகள் முயன்றன.

1993 இல் ஜெனரல் ஐடீட்டைக் கைப்பற்றுவதற்காக ஐ. நா. படைகள் தலைநகர் மொகடிஸுவில் வீடு வீடாக நடத்திய தேடுதல்களின் போது நூற்றுக்கணக்கான அப்பாவி சோமாலியர்கள் கொல்லப்பட்டனர். ஐ. நா. படைகளை சோமாலிய மக்கள் வெறுப்புடன் நோக்கத் தொடங்கினர்.

ஐ. நா. படைகள் இனவெறி நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கனேடிய படை அடாவடித்தனம்

ஐ. நா. படையில் இடம் பெற்றிருந்த கனேடிய படையினர், உணவு தேடி ஐ. நா. முகாமுக்குச் சென்ற 16 வயது சோமாலிய இளைஞன் ஒருவனை சித்திரவதை செய்து கொலை செய்த சம்பவம் ஒன்றும் தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளது.

660 பேரைக் கொண்ட இந்த கனேடிய படையினர் கனடாவுக்கு திருப்பி அழைக்கப்பட்டு விட்டனர்.

அவர்களில் 9 படையினர் மீது கனேடிய ராணுவ நீதி மன்றத்தில் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

சோமாலியாவில் உள்ள போட்டி ஆயுதக் குழுக்களிடையே சமரசம் ஏற்பட்டு இடைக்கால அரசும் யுத்த நிறுத்தமும் ஏற்படுமானால் ஐ. நா. தனது பணிகளை சோமாலியாவில் மீண்டும் ஆரம்பிக்கும் என்று ஐ. நா. பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி தெரிவித்துள்ளார்.

### அரசியல் தீர்விலேயே எதிர்காலம்

சோமாலியாவின் எதிர்காலம், அரசியல் தீர்விலேயே தங்கி உள்ளது.

எந்த ஒரு தீர்விலும் ஜெனரல் ஐடீட்டே முக்கிய நபராகக்கருதப்படுகிறார். கடந்த காலப் போராட்டங்கள் மூலம் தம்மை ஒரு தேசிய தலைவராக அவர் உயர்த்திக் கொண்டுள்ளார்.

சோமாலியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு கடந்த காலங்களில் நைரோபியில் எத்தனையோ மாநாடு

-சஞ்சாரன்-

கள் நடைபெற்று முடிந்து விட்டன.

பல தீர்வுத் திட்டங்கள் தெரிவிக்கப்பட்டன. ஆனால் போட்டி ஆயுதக்குழுக்களினால் அவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

தற்போது ஐ. நா. படைகள் முற்றாக வெளியேறி இருப்பது சோமாலி யமக்கள் தமது பிரச்சினையைத் தாமே தீர்க்க சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால் சமாதானத்துக்குப் பதிலாக முன்னரைப்போல் மீண்டும் ஆயுதக் குழுக்களுக்கிடையே மோதல் ஆரம்பமாகுமானால் அது சோமாலியாவுக்கு மேலும் பேரழிவுகளையே ஏற்படுத்தும் ஐ.நா. படைகளின் தலையீட்டையும் அது நியாயப்படுத்தி விடும்.

★

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# கணப்பொழுதில் 5 ஆயிரம் மக்களை பலி கொண்ட கோபே நகர பூமி நடுக்கம்!

ஒரு சில நிமிட நேரத்தில் பேரனர்த்தம் நடந்து முடிந்தது.

விளைவாக, 5,329 பேர் இறந்தார்கள்; 25 ஆயிரம் பேர் காயமுற்றார்கள்; ஒரு லட்சம் கட்டடங்கள் இடிந்து நாசமாகின; 140 மில்லியன் டொலர் நஷ்டம் ஏற்பட்டது.

இந்த ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதி காலை ஜப்பானின் கோபே நகரத்தில் ஏற்பட்ட பூமி நடுக்கத்தினால் தான் இந்த பெரும் நாசங்கள் விளைந்தன.

கோபே என்ற ஜப்பானின் துறைமுக நகரம் தலைநகரான டோக்கியோவுக்கு மேற்கே 400 மைல் தூரத்தில் உள்ளது.

15 லட்சம் மக்களைக் கொண்ட இந்த நகரம் பூமி நடுக்கம் ஏற்படக்கூடிய இடமாக முன்னர் கருதப்படவில்லை.

ஆனால் மக்கள் துயில் கொண்டிருக்கும் வேளையில் திடீரென்று தாக்கிய பூமி நடுக்கம் கோபே நகரத்தை மட்டுமல்ல, முழு ஜப்பானையுமே கதி கலங்க வைத்துள்ளது.

இதனால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பு ஜப்பானியப் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதிக்கும் என்று நிபுணர்கள் கருதுகின்றார்கள்.

ஒரு புறத்தில் கோபே நகரத்தைச் சீரமைக்க வேண்டும்; சீர் குலைந்த மக்களின் வாழ்க்கையை ஒழுங்காக்க வேண்டும்.

மறுபுறத்தில் தகர்ந்து நொருங்கிய பெரும் தொழிற்றுறை நிலையங்களைப் புனரமைக்க வேண்டும்; அவற்றின் உற்பத்தியை ஆரம்பிக்க வேண்டும்.

### பொருளாதாரப் பாதிப்பு

கோபேயில் நிகழ்ந்த 7.2 றிச்ரர் அளவிலான பூமி நடுக்கத்தால் ஜப்பானிய பொருளாதாரத்தின் முதுகெலும்பான பிரமாண்ட மின்னணுக் கம்பெனிகளின் கிளைகள் இயங்காது போயுள்ளன.

இதனால் கோபேயில் மட்டுமல்ல, ஜப்பானின் இதர பாகங்களிலும் உற்பத்தி முடங்கியுள்ளது. ஏனென்றால் இந்தக் கம்பனிகளில் தயாரிக்கப்படும் பாகங்கள் அவற்றுக்குச் செல்லாதது தான்.

கோபேயில் பாரிய கனரகத் தொழிற்துறை நிலையங்கள், அடர்ந்து நெருங்கிய வீடுகள் ஆகியன அவ்வளவு இறுக்கமில்லாத, நிரப்பப்பட்ட மண்ணில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இது பூமி நடுக்கம் உயிரிலும் பொருளிலும் பெரும் பலியை எடுப்பதற்கு மிகவும் சாதகமாக அமைந்தது.

### மனித அவலம்

பூமி நடுக்கத்தால் ஏற்பட்ட மனித அவலம் மிகவும் சோகமயமானது.

டெலிவிஷன், டெக், வீடியோ என்றெல்லாம் பல வித வசதிகளுடன் வாழ்ந்த மக்கள் சடுதியாக ஒரு நேரச் சோற்றுக்கும், குடிநீருக்கும், போர்வைக்கும் அலைந்திட நேரிட்டுள்ளது.

பூமி நடுக்கத்தால் இறந்தவர்களின் பிரேதங்கள் மரணச்சாலைகளில் கிடந்து அழுகி நாற்றம் எடுத்தன.

மரணச்சாலைகள் கூட அங்கு இல்லை. புத்த மதக் கோயில்களே மரணச்சாலைகளின் பங்கை வகித்தன.

மயானங்களும் அழிந்தபடியால் இந் நகரத்துக்கு அண்மையில் உள்ள மற்ற நகரங்களுக்கும் சடலங்களை எடுத்துச் சென்று எரிக்க வேண்டி

## மக்கள் துயில்கொண்டிருந்த வேளை நிகழ்ந்த நினைக்க முடியாத கொடூரம்

யேற்பட்டது.

ஒரு நாளைக்கு 100 சடலங்கள் என்ற விகிதத்தில் தான் அவை தகனம் செய்யப்பட்டன.

### பயங்கர அனுபவம்

பூமி நடுக்கத்தில் அகப்பட்டு தப்பி உயிர் வாழ்வது ஒரு பயங்கர அனுபவமாகும். கோபே நகர மக்கள் இதன் பிடிப்பிலிருந்து விடுபட நீண்ட காலம் எடுக்கும்.

காலை 5-46 மணிக்குப் பூமி நடுக்கம் ஏற்பட்ட போது கோபே நகர மக்களில் பெரும்பாலானோர் தூக்கத்தில் இருந்தார்கள்.

அதிருஷ்டவசமாக அவ்வேளையில் ஓடிய ரயில்களில் பயணிகள் மிகக் குறைவாக இருந்தனர். ரயில்கள் தண்டவாளத்தை விட்டு ஓடின அல்லது புரண்டன. பாதைகளிலும் போக்குவரத்து குறைவாகவே இருந்தது.

ஆனாலும் [illegible] யும் சம்பவங்கள் [illegible]

''எனது கார் போய்க்கொண்டிருந்த போது முன்னால் இருந்த நெடுஞ்சாலை சரிந்து வீழ்ந்தது. எனது கார் சறுக்கிக் கீழே சென்றது முதலில் இடிமுழக்கம் போன்ற ஒலி எனக்குக் கேட்டது. பின்னர் நான் விழுங்கப்படுவது போல் உணர்ந்தேன்.'' என்று ஒரு சாரதி சொன்னார்.

கோபேக்கு ஊடாகச் செல்லும் ஒரு கிலோ மீற்றர் நீளமான ஹான்சின் கடுகதி நெடுஞ்சாலை சரிந்து விழுந்து ஒரு நீண்ட சுவர் போலக் காட்சி அளித்தது.

''ஒரு பெரிய குண்டுவெடிப்புக்கு மத்தியில் தூக்கி வீசப்படுவதுபோல் நான் உணர்ந்தேன். என்னுடைய மர வீடு விழுந்து நொருங்கியது. எல்லாம் கணநேரத்தில் நடந்து முடிந்தன'' ஒரு குடும்ப மாது இவ்வாறு கூறினார்.

### தீ, மண்சரிவு சேதங்கள்

பழைய தொடர்மாடிக் கட்டடங்கள் இடிந்துவிழுந்த

- பாரதிநேசன் -

தாலும் காஸ்'பைப்' உரசல் உரசு காரணமாக ஏற்பட்ட தீயினாலும் தான் அதிகமான சேதம் ஏற்பட்டது என்று கூறலாம்.

பலமான குளிர் காலக் [illegible]

பட்டன. இவற்றில் பெருமளவு வீடுகள் அகப்பட்டன, 40 பேர் உயிருடன் புதைபட்டார்கள்.

கோபேத் துறைமுகத்தில் துறைமேடைகள் வளைந்து நெளிந்தன. கப்பல் நிறுத்தும் இடங்களில் மண் நிரம்பியிருந்தது.

சனோமியா மாவட்டம் மிகவும் பாதிப்புக்குள்ளாகிய பிரதேசங்களில் ஒன்றாகும்.

அங்கு கட்டடங்களின் இடிபாடுகள் பிரதான வீதியை மறைத்திருந்தன.

ஆனால் ஒசாக்கா குடாவிலுள்ள புதிய கன்சாய் விமான நிலையம் அவ்வளவு சேதப்படவில்லை.

கன்சாய் பிரதேசத்தில் பல கலாசாரப் பொக்கிஷங்கள் சேதப்பட்டன. கோபேயின் புகழ்பெற்ற இகுட்டா ஷின்ரோ ஆலயத்தின் கூரை தவிர மற்றவை அனைத்தும் சேதமாகின. கியோட்டோ, நாறா முதலிய இடங்களிலும் பல கலாசார கேந்திரங்கள் அழிந்து போயின.

கியோட்டோவில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பழமையான விலை மதிப்பற்ற புத்தசிலைகள் சிலவும் அழிந்தவற்றுள் அடங்கும்.

கோபேயின் உருக்காலைகள், மற்சுஷிற்றா மின் உபகரண தொழிற்சாலைகள் ஆகியன உட்படப் பல தொழிற்சாலைகள் இயக்கத்தை இழந்தன.

பூமி நடுக்கம் நடந்து முடிந்து இப்பொழுது சுமார் ஒன்றரை மாதம் ஆகின்றது. கோபே நிலைமை அபிவிருத்தி அடைந்துள்ளது என அறிய வருகிறது. போதிய நீரும் உணவும் அகதியான மக்களுக்குக் கிடைக்கிறது.

பல முகாம்களில் சூடான நூடில்ஸ் வழங்கப்படுகிறது. துணிமணி, துவாய்கள் முதலிய நிவாரணப் பொருள்கள் உள் நாட்டின் பிற பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வந்து திறமையான முறையில் விநியோகிக்கப்படுகின்றன. ஹியோகோவில் அரைவாசிப் பாடசாலைகள் வகுப்புகளை நடத்துகின்றன.

பூமி நடுக்கத்தால் அலைக்கழிந்த கோபே நகரத்தில் சில சிறிய களவுகள் நடைபெற்ற போதும் பெரியளவிலான கொள்ளையாடல் இடம்பெறவில்லை.

மக்கள் பங்கீட்டு உணவைப் பொறுமையாகக் காத்திருந்து பெறுகிறார்கள். அரசாங்கம் பணிப்புகளைக் கடமை உணர்வுடன் பின்பற்றுகிறார்கள்.

சேதமடையாத கடைகளினதும் சந்தைகளினதும் உரிமையாளர் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்கள். பொதுக்குளிப்பு, நிலையங்கள் இலவசமாக சேவைபுரிகின்றன.

உண்மையில் ஜப்பானிய மக்கள் தற்போது தமது பெருங்கொடைத் தன்மையைக் காட்டுகிறார்கள்.

கோபே பூமி நடுக்கத்தைப் பொறுத்து பிரதமர் தொமிச்சி முறயாமாவின் அரசாங்கம் திர்க்கமான முறையில் செயல்படவில்லை மிகவும் ஆறுதலாகவே மீட்புப் பணிகளில் இறங்கியது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பூமி நடுக்கத்தின் பின் முதல் 6 மணி நேரத்தில் மீட்பில் ஈடுபட்டிருந்தால் பல உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும் என்று கூறப்படுகிறது. ★

### புலிகளின் குரல் வானொலியில்

**05 — 03 — 1995**

**ஞாயிறு இரவு**

★ 8-01 — இசையரங்கம் செல்வி. சாந்த நாயகி சுப்பிரமணியத்தின் வயலின் கச்சேரி
★ 8-20—தாயகப்பாடல்கள்
★ 8-30—செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம்— கருணைரவி எழுதும் ''காணிநிலம்வேண்டும்'' அங்கம் 2

**06— 03 — 1995**

**திங்கள் காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15— நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி ஒலிபரப்பு

**ஞாயிறு மாலை**

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — கதம்பம்
★ 6-00— சிந்தனைக்கு சில வினாடிகள்
★ 6-02 — உங்கள் தெவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு மாதம் நிரம்பிய மணித் தாராக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: இல. 71, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (35450)

Broiler இறைச்சிக்கோழிகள் காலை 7 மணி தொடக்கம் சுத்தம்செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அடைவைக்கக்கூடிய நல்லினக் கோழி முட்டைகள், பெரிய சாப்பாட்டு முட்டைகள். இதரை வாழைக்குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர். (35472)

50 கோழி வளர்க்கக்கூடிய இருபக்க வாசல் கொண்ட கோழிக்கூடு விற்பனைக்கு உண்டு. இல 3, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (35502)

இரண்டு மாதங்கள் நிரம்பிய பொமனேரியன் நாய்க்குட்டிகளும், முயல் குட்டிகளும், முயல்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 9, பிளைச்சர் ஒழுங்கை, கண்டிக்குளி மகளிர் கல்லூரி அருகில் கண்டிக்குளி. (35505)

கலாசாலை வீதியில் 3 பரப்புக் காணியில் சகல வசதிகளும் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 115, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி. [35508]

### விற்பனையாகிறது

கும்பகர்ணன் வதைப்படலம் யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரி முதற்கலைத் தேர்வு G. A Q. பாலபண்டித மாணவர்களுக்கு ஒரு பாடநூல் எல்லாப் புத்தகசாலையிலும் இடைக்கும். மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம், ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர். (சி-384)

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima, Hyline Brown, Christombu, Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [35471]

### வீனஸ் அன்ரனா

கார் பற்றறி மூலம் 12'' கறுப்பு – வெள்ளை ரி. வியில் ரூபவாஹினி – மெட்ராஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு அன்ரனா பொருத்தி வசதி செய்துதரப்படும். (கார் பற்றறி, 12'' கறுப்பு – வெள்ளை ரி. வி. உள்ளவர்கள் தொடர்புகொள்க) வீனஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-397)

### பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டுகள் 3,4,5,6,7,8,9, 10,O/L,A/Lக்குரிய எல்லாப் பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும எம்மால் வெளியிடப்படுகின்றன. நேரில் அல்லது தபாலில் அல்லது பிரபல புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். [8358]

### LITERATURE

Answers for past Question Paper 92, 93, 94, English Literature, Poems, Answer to Question on Poems Poetry WorkBooks,Prose andDrama. Oliver Twist Madol Doova by A. K. Hewage. Available at Poobalasingham, Book Depot, Jaffna. (C-601)

### வர்த்தகமும் நிதியும்

விற்பனையாகின்றது தரக்கட்டுப்பாடு, இருப்புக்கட்டுப்பாடு, களஞ்சியம், தொடர்பாடல், போக்குவரத்து ஆகிய பகுதிகள் தொடர்பான பாடத்திட்டத்தினை உள்ளடக்கியது. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆக்கியோன் தேவராஜன் ஜெயராமன். [8360]

### புலமைப் பரிசில் - 95

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக பொது உளச்சார்பு, பொது அறிவு பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும் 2வது, 4வது ஞாயிற்றுக்கிழமையிலும் ஊக்குவிப்பு பயிற்சிகள் ஒவ்வொரு வாரமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. நேரில் / தபாலில் / பிரபல புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8357)

### காணவில்லை

யுனிரெக் பொறியியல் நிறுவனத்திற்குச் சொந்தமான கறுப்பு அல்சேஷன் நாய் சமுத்தில் பட்டியுடன் 3-3-95 இரவு தொடக்கம் காணவில்லை. கண்டவர்கள் பிடித்துத் தந்தால் அல்லது அறிவித்தால் சன்மானம் வழங்கப்படும். யுனிரெக் பொறியியல் நிறுவனம், வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். [35507]

### தேவை

அசைவ உணவு தயாரிக்கத் தெரிந்த சமையல்காரரும் உதவியாளும் தேவை நேரில் வரவும். பாரத் உணவகம், ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (35495)

### மணமகன் தேவை

கனடாவில் நிரந்தர வதிவுரிமையுடைய, 28 வயதுடைய பெண்ணுக்கு மணமகன் தேவை. கனடாவுக்கு ஸ்பொன்சர் செய்யப்படும் முழுவிவரங்களுடன் இல.964, மே/பா உதயன். [8361]

### துர்க்கா திருமண சேவை

எல்லா மதத்தவர்க்கும் வெளிநாடு உள்நாட்டுக் குறிப்புகள் உண்டு. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம். கே. கே. எஸ். வீதி, மல்லாகம். [8267]

### திருமண சேவை

செவ்வாய் தோஷமுள்ள டாக்டருக்கும், பொறியியலாளருக்கும், கிரகடாவமும் செவ்வாயுமுள்ள ஆசிரியருக்கும் தகுந்த மணப்பெண்கள் தேவை. எம்மிடம் பல தொழில்களில் மணமக்களுண்டு. விவரங்களுக்கு ஜாதகத்துடன் கடிதமூலம்/ நேரில் தொடரவும் சுவாமியார், விநாயக மாங்கல்ய சேவை இல. 53/5, அன்ன சத்திர ஒழுங்கை, கந்தர்மடம். (35494)

### மணப்பெண்கள் தேவை

கெளரவ குடும்பம், செவ்வாயற்ற, நிரந்தர வாசி ஜேர்மனி, லண்டன் வயது 31, 30. பாவம் 7. 26 வயதிற்குள் மணப்பெண்கள் தேவை. கே. எஸ். பிள்ளை, சோதிடர், திருவீதி, உரும்பிராய் வடக்கு. (35506)

### மணமக்கள் தேவை

கனடாவில் நிரந்தர வதிவுரிமையுடைய 8இல் செவ்வாயுடைய 36 வயது மணமகனுக்கும், உதயத்தில் செவ்வாயுடைய 33 வயது மணமகளுக்கும் பட்டதாரி மணமக்கள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. கனடாவுக்கு ஸ்பொன்சர் செய்யலாம். முழுவிவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல 763, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [35355]

## ஓய்வூதியம்

சண்டிலிப்பாய், மார்ச் 5 சங்கானை ப. நோ. கூ. சங்கத்தின் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான பெப்ரவரி மாத ஓய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [ஒ-135]

## வீடு விற்பனைக்கு

இல 5 பிளச்சர்ஸ் லேன், கண்டிக்குளியில் மூன்று பரப்புக் காணியில், 5 படுக்கை அறைகளைக் கொண்ட, சராஜ் உட்பட சகல வசதிகளுடனான வீடும் புறம்பாக அருகில் வீடுகட்டக் கூடிய மூன்று பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

டாக்டர் என் அல்பேர்ட் பாலசுந்தரம்,
70 கொழும்புத்துறை றோட்,
கண்டிக்குளி.

(35419

## பதவி வெற்றிடம்

### திட்ட முகாமையாளர்

பனை, தென்னை வள அபிவிருத்தியுடு சம்பந்தப்பட்ட திட்டங்களை அமுல் நடத்துவதற்கான திட்ட முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தகைமை:-
பல்கலைக்கழக பட்டம் பெற்றிருக்கவேண்டும்.

அனுபவம்:-
திட்டமிடல், திட்ட அமுலாக்கலில் அனுபவம் வாய்ந்தவராக இருக்க வேண்டும்.

சம்பளம்:-
பேசித் தீர்மானிக்கப்படும்

வயது:-
30 – 50 ற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 15 03 1995**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-

பொது முகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்பு அதிகார சபை,
யாழ்ப்பாணம். [சி-712]


மருத்துவ, விஞ்ஞான, வர்த்தக, முகாமைத்துவ, கணனி விஞ்ஞானத்துறைகளில் அண்மையில் வெளியாகிய நூல்களும் அவற்றின் E-L-B-S பதிப்புக்களும், ஆங்கில அகராதிகள், ஆங்கில - தமிழ் அகராதிகள். ஆங்கில தமிழ் சிறுவர் நூல்கள், பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை பாடநூல்கள் நியாயவிலையில் கிடைக்கும்.

✶ மொத்தக் கொள்வனவுக்கு விசேட கழிவு வழங்கப்படும் ✶

# யாழ்ப்பாண புத்தக நிலையம்

448, கிட்டுச்சாலை,
(வைத்தியசாலை முன்)
யாழ்ப்பாணம்.

(சி/490)



## IS SECURITY A PROBLEM!!

For Futher Details Contact Well Experienced Personnel

**Capt N. SOMASUNDERAM**
**K. THARMAKULASINGAM**

(Ex-Chief Security Officer-Lanka Cement Limited Security Consultant - Leading Firm in Jaffna)

Our Services Include the Following:

- ★ Consultancy - on all Security Matters.
- ★ Providing Well Trained Security Personnel
- ★ Investigation and Confidental Inquiries.
- ★ Training of Personnel.
- ★ Fire Protection.

## ARUN SECURITY SERVICE

19, 2nd Lane,
Power House Road,
Jaffna.

C-717)


வ
கச்சேரி – நல்லூர் வீதி,
பாணன்குளம்
நாச்சியம்மன் ஆலய

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | — 05 — 03 — 1995 | ஞாயிறு காலை 10-00 மணி |
| குருவாயூரப்பன் உற்சவம் | — 16 — 03 — 1995 | வியாழன் காலை 6-30 மணி |
| வேட்டைத் திருவிழா | — 16 — 03 — 1995 | வியாழன் பிற்பகல் 3-00மணி |
| சப்பறம் | — 17 — 03 — 1995 | வெள்ளி மாலை 6-00மணி |
| தேர்த்திருவிழா | — 18 — 03 — 1995 | சனி காலை 7-00 மணி |
| தீர்த்தத்திருவிழா | — 19 — 03 — 1995 | ஞாயிறு காலை 8-00 மணி |
| பூங்காவனம் | — 20 — 03 — 1995 | திங்கள் மாலை 5-00 மணி |
| சங்காபிஷேகமும் வைரவர் சாந்தியும் | — 21 — 03 — 1995 | செவ்வாய் காலை 8-30மணி |
| அன்னதானம் | — 22 — 03 — 1995 | புதன் பகல் 12-00 மணி |

ஆலய
பரிபாலன சபையார்.

கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

[35501]

யாழ். வன்னி

## தொடர்புச் சேவை

யாழ்ப்பாணத்திற்கும், வன்னிப்பகுதிக்கும் செய்திகள் (தந்தி) பரிமாற்றம் செய்வதற்கு யாழ். ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலும், கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அருகிலும் உள்ள கருமபீடங்களிலும், ஓமந்தை சோதனை நிலையத்திலுள்ள கருமபீடத்திலும் செய்திகள் ஏற்கப்படுகின்றன.

1. சலுகைச் செய்திகள்:
முதல 15 சொற்களுக்கும் ரூபா 15/-வும் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 2/ வும் அறவிடப்படும்.

2. வழமைச் செய்திகள்:
முதல் 10 சொற்களுக்கு ரூபா 100/-வும் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5/- வும் அறவிடப்படும்.

3. வியாபாரச் செய்திகள்:
முதல் 10 சொற்களுக்கு ரூபா 200/-வும் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 15/-வும் அறவிடப்படும்.

(மேற்கூறப்பட்ட 1, 2ற்குரிய பதில் பெறுவதற்கு ரூபா 100/-வும் 3ற்கு ரூபா 200/-வும் அறவிடப்படும் )

அவசர கட்டணம் அறவிடப்படும் மேற்குறிப்பிட்ட செய்திகள் உடன் விநியோகிக்கப்படும்.

மேலதிக விவரங்களை அந்தந்த கருமபீடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(35152)


## சிங்களம் கற்க வேண்டுமா?

பேச, எழுத, வாசிக்க, பரீட்சையில் சித்தி பெற உடன் நாட வேண்டிய இடம்;

## "A" LEVEL CENTRE

1ஆம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**ஆரம்பம்: 07 – 03 – 1995**

Tue & Thu 5 – 6 p. m.

Miss A. ALISTA

[சி-603]


மாற்றம் ஏதும் செய்ய முடியாத

## நவீனமான பாஸ்போர்ட் விரைவில் வழங்கப்படும்

மாற்றங்கள் ஏதும் செய்ய முடியாத — நவீனமான — கடவுச் சீட்டுக்கள் விரைவில் வழங்கப்பட இருக்கின்றன.

இலங்கையில் தற்போது வழங்கப்படும் கடவுச் சீட்டுக்கள் இத்தகைய பாதுகாப்பு உடையவை அல்ல.

வெளிநாட்டு விமான நிலையங்களில் கடவுச் சீட்டுக்களில் மோசடிகள் இடம் பெற்றிருப்பது அண்மைக் காலங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற காரணங்களினால் நேர்மையான இலங்கைப் பயணிகள் கூட சர்வதேச விமான நிலைகளில் தேவையற்ற விசாரணைகளுக்கும், சோதனைகளுக்கும் உட்படுகின்றார்கள் என்று குடிவரவு குடியகல்வு திணைக்கள ஆணையாளர் ஈ. ஆரியசேன தெரிவித்தார்.

கேள்விப்பத்திர நடைமுறைகள் பூர்த்தியானதும், சிறந்த பாதுகாப்புள்ள கடவுச் சீட்டுக்கள் அச்சிடப்படும் என்றும் அவர் கூறினார். (ஒ-5)


மானிப்பாய் கோவில்பற்று
லயன்ஸ் கழகம்

## வசதி குறைந்தோருக்கான கண் சத்திரசிகிச்சை

முகாம் இல. 2

கண்ணில் பூப்படலம் (Cataract) வளர்ந்த நோயாளரை சத்திர சிகிச்சைக்குத் தெரிவு செய்வதற்கான ஆரம்ப வைத்திய பரிசோதனை.

இடம்: மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை

காலம்: 10 - 03 - 95 வெள்ளி காலை 7-30மணி

கற்றறக் (Cataract) எனப்படும் கண்ணில் பூப்படலம் வளர்ந்துள்ள 55வயதிற்கு மேற்பட்ட நோயாளர்கள் 08-03-95 புதன்கிழமை 3-00மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தங்களைப் பதிவு செய்து கொள்ளவும், ஏற்கனவே கழக அங்கத்தவர்களுடனும், சனசமூக நிலையங்களுடனும் பதிவு செய்தவர்கள் மீண்டும் பதிவு செய்யத் தேவை இல்லை.

செயலாளர்,
மானிப்பாய் கோவில்பற்று.
லயன்ஸ் கழகம்.

விளம்பர அன்பளிப்பு:

## குலம் குளிர்பான அகம்

ஆலடி சந்தி, மானிப்பாய்.

[8369]


3 ஆம் ஆண்டு

## நினைவலைகள்



**சுப்பிரமணியம் இராஜலிங்கம்**

தோற்றம்: 03 – 08 – 1958  மறைவு: 07 – 03 – 1992

எங்கள் அன்புத் தெய்வமே
அணையாத ஒளித்தீபமே
வான்நிலவே நீ மறைந்து
ஆண்டு மூன்றும் ஆனதுவோ
பாசத்திற்கோர் இருப்பிடமாய்
பண்பிற்கோர் உத்தமனாய்
இன்னல்கள் பல கடந்து
ஈன்றவள் போல் பாசமுடன்
உலகமிது என்றுணர்த்தி
ஊரறிய வாழ வைத்து
பாசமதை காட்டிவிட்டு
பாதியிலே சென்றது மேன்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பொற்பதி விநாயகனை துதிப்போமாக.

நின்பிரிவால் துயருறும்;
பெற்றோர், சகோதரர்,
மைத்துனன், மருமக்கள்.

பொற்பதி வீதி,
கொக்குவில்.

(35500)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
392/2 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

## மக்கள் அவலம் நீங்குமா?

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு வருவோரில் பெரும்பாலானோர் மனச் சோர்வு, பதற்றம் போன்ற மெய்ப்பாட்டுநோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதுவும் 13 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட இளம் சந்ததியினரே இத்தகைய நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு வரும் இந்த வயதுக்கு உட்பட்டோரில் 90 சதவீதமானோர் இந்தவகை நோய்களினால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லாதவாறு இளம் வயதினர் இங்கு பாதிக்கப்பட்டிருப்பது வேதனை தருகிறது. எமது அடுத்த சந்ததியின் எதிர்காலம் குறித்து கேள்விக் குறியை எழுப்புகிறது.

1990 ஜூனில் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமான பின்னர் கடந்த நாலரை ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் எதிர்நோக்கிய இன்னல்களின் விளைவுகளையே இந்த இளம் சந்ததியினர் தற்போது அனுபவிக்கின்றனர். தற்போதைய நிலை தொடருமானால் விளைவுகள் இன்னும் மோசமானவையாகவே இருக்கும்.

குடாநாட்டில் 40 சதவீதமானோர் இன்னும் இடம்பெயர்ந்த நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் கைவிடப்பட்ட உடைந்த வீடுகளிலும், முகாம்களிலுமே இன்னும் தங்கியுள்ளனர். முகாம்களில் போதிய சுகாதார வசதிகள் கிடையாது.

சுயதொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் தொழில் இழந்ததால் வாழ்க்கையை நடத்த முடியாத நிலை இருந்து வருகிறது.

முற்று முழுதாக நிவாரணத்தை நம்பியே இந்த மக்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதனால் ஊட்டச்சத்துக் குறைவு குடாநாட்டு மக்கள் எதிர் நோக்கும் மற்றொரு முக்கிய பிரச்சினையாக உள்ளது.

யாழ். மாநகர எல்லைக்குள் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைவினால் பாதிக்கப்படுவது அதிகரித்துக் காணப்படுவதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி தமது கடந்த வருட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஊட்டச்சத்துக் குறைவு குழந்தைகளுக்கு நீண்டகாலப் பாதிப்புக்களை ஏற்படுத்தும். மூளைவளர்ச்சியையும் மழுங்கடிக்கச் செய்யும். தற்போதைய நிலைமையில் மாற்றம் ஏற்படாவிடில் ஒரு நலிவடைந்த சமுதாயம் உருவாவதைத் தடுக்க முடியாது போகலாம்.

சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு சமாதானம் பற்றிப் பெரிதாகப் பேசுகிறது. யாழ்ப்பாணத்தில் செய்யப்பட உள்ள புனர்நிர்மாணம், புனரமைப்பு வேலைகள் குறித்து பெரிய அளவில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஆனால் குடாநாட்டு மக்களின் அவல நிலை தொடருகிறது. மாற்றம் எதுவுமே இல்லை. மக்கள் சத்துள்ள உணவுகளை வாங்கும் அளவுக்கு அவர்களின் வருமானம் இல்லை அத்தகைய உணவுகள் தாராளமாகக் கிடைப்பதும் இல்லை.

இயல்பு நிலை திரும்பினால் தான் மக்களின் அவல நிலை ஓரளவாவது நீங்கும். அதற்கு அரசு முட்டுக்கட்டையாக இருக்கும் வரை போசாக்கின்மை, அதனால் ஏற்படும் பாதிப்புகள் என்பன தொடரும் சாத்தியம் அதிகம். அதற்கு இடம் கொடாமல் போரின் பாதக விளைவுகளை ஈடு செய்யக் கூடிய திட்டங்களை நாமே வகுத்து அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படுத்த வேண்டும்.

# புலிகளுடன் பேசும் அரச தரப்புக் குழுவில் மாற்றம் செய்ய ஜனாதிபதிக்கு அழுத்தம்

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையான சமாதானப் பேச்சுக்கள் தொடருமா? இரு சாராருக்கும் இடையில் முறுகல் நிலை ஒன்று எழுந்துள்ளது போலத் தெரிகிறது. அதனால் பேச்சுக்கள் முறியுமா? மோதல் தவிர்ப்பு உடைந்து மீண்டும் யுத்தம் வெடிக்குமா? கடந்த ஆறு மாதங்களாக ஓய்ந்திருக்கும் விமானக் குண்டு வீச்சு மீண்டும் எம்மைப் பயமுறுத்துமா?

பாடசாலை மாணவர் முதல் வயது வந்த பெற்றோர் வரை, எல்லோரது வாயிலும் இப்போது வரும் கேள்விகள் இவை.

தமிழீழ தேசிய தலைவர் திரு. வே. பிரபாகரன் 25-2-95 ஆம் திகதியிட்டுத் தமக்கு அனுப்பிய கடிதம் குறித்து சந்திரிகா வெளியிட்ட கருத்து இத்தகைய சந்தேகங்களையும், அவநம்பிக்கைகளையும் யாழ்ப்பாணத்தில், தமிழர்களிடம் தோற்றுவித்துள்ளது.

இதேவேளையில், தலைவர் பிரபாகரனின் கடிதத்துக்கு வேறு அர்த்தம் கொடுத்து சமாதான முயற்சியை விடுதலைப்புலிகள் கெடுக்கப் போகிறார்கள்; மீண்டும் போரை நடத்தப் போகிறார்கள் என்ற பிரசாரம் கொழும்பில் தீவிரமாக நடக்கிறது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வை — தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதை — விரும்பாத சக்திகள் இந்த விஷமப் பிரசாரத்தில் தீவிர அக்கறை காட்டுகின்றன, தென்னிலங்கைப் பத்திரிகைகள் பலவும் இதற்குத் தூபமிடுகின்றன,

அதன் காரணமாக — சந்திரிகா அரசாங்கம் எவ்வாறு தான் முயன்றாலும், எதனைத் தான் செய்தாலும், எவ்வளவு தான் அள்ளிக் கொடுத்தாலும் விடுதலைப் புலிகள் எதற்கும் இணங்கமாட்டார்கள். போரும் நிற்காது; பிரச்சினையும் தீராது; இப்படியே இழுபட வேண்டியது தானா என்று தெற்கு வாழ் மக்கள் சந்தேகங்களை எழுப்புகிறார்கள். சமாதானப் பேச்சில் அவநம்பிக்கை கொள்ளத் தொடங்கிவிட்டார்கள்; என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### வடக்கிலும் தெற்கிலும் அவ நம்பிக்கை

#### அவநம்பிக்கை முகிழ்க்கிறது

மொத்தத்தில், சமாதானப் பேச்சில் முன்னேற்றம் காணலாம், இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண முடியும் என்பதில் வடக்கு மக்களுக்கும் தெற்கு மக்களுக்கும் அவநம்பிக்கை முகிழ்க்கத் தொடங்கியுள்ளது. இந்த அவநம்பிக்கை வெளிநாடுகளுக்குப் பரவத் தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

இதற்கு உண்மையான காரணம் யார்?

தலைவர் பிரபாகரனின் கடிதத்தில் கூறப்பட்ட விடயங்கள் பொய் என்றும், அதில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களைத் தாம் நிராகரிப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிகா, எடுத்த எடுப்பிலேயே, விட்டெறிந்து பேசும் தொனியில், கருத்துச் சொன்னதே எல்லாத் தரப்புகளிலும் அவநம்பிக்கை உணர்வை முகிழ்க்கச் செய்திருக்கிறது!

சந்திரிகா ஒரு நாட்டின் ஜனாதிபதி. இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்பதில் உண்மையான விருப்பம் உடையவர். அந்தத் தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப் போகும் பொறுப்பும் அவரிடமே இருக்கப் போகிறது. அவை மட்டுமன்றி, சிக்கலான இந்த விடயத்தைக் கையாள இருப்பவரும் ஜனாதிபதியே.

எனவே இது விடயத்தில் தாம் வெளிவிடும் ஒவ்வொரு வார்த்தையும் மிக ஊன்றி அவதானிக்கப்படும். பல கோணங்களில் விமர்சிக்கப்படும். பல விதமாகத் திரிபுபடுத்தப்படும். ஒவ்வொரு சொல்லும் பல பாதிப்புகளை உண்டாக்கும், எதிரிடையான விளைவுகளையும் தோற்றுவிக்கலாம். ஆகையால் தாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து பேச வேண்டும், அது தரக்கூடிய விளைவுகளை அறிந்து பேச வேண்டும் என்பதனை சந்திரிகா உணர்வது அவசியம்,

''யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு'' என்ற குறளை அவர் பயன் அறிந்து படிக்க வேண்டும், அதனைக் கடைப்பிடிக்க வேண்டும்,

#### உண்மையைச் சொன்னால்......

தலைவர் பிரபாகரனின் கடிதம் மிகவும் மென்மையான முறையில், அரசு விடும் தவறை, அதன் அணுகுமுறை மாற்றத்தைச் சுட்டிக் காட்டுவதாகவே உள்ளது. உண்மைகள்தான் அதில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. உண்மையைச் சொன்னால் உடம்பெல்லாம் நோவது இயல்புதான். அந்த நோவின் வேதனையில், பாதிப்புகள் குறித்த பின்யோசனை இன்றி எதனையும் உளறிவிடலாம் என்றிருக்கக் கூடாது.

கடிதத்தில் குறிப்பிட்ட சில விடயங்களைத் தீர்த்து வைக்க அரசாங்கம் தவறுமானால் சமாதான சூழ்நிலைக்கு பெரும் பங்கம் ஏற்படும் என்று தலைவர் பிரபாகரன் தெரிவித்ததை—

பேச்சுவார்த்தையைக் குழப்புவதற்கான அல்லது முறிப்பதற்கான எச்சரிக்கை வாசகமாக விஷமிகள் அர்த்தம் கொடுத்துப் பிரசாரம் செய்வதற்கு இடமளித்தவர் சந்திரிகாவே!

கடிதத்தில் கூறப்பட்டவை பொய் என்றும், தாம் அதனை நிராகரிப்பதாகவும் சந்திரிகா கூறியதுதான் தாமதம் பேச்சுவார்த்தையைக் குழப்பிவிட வேண்டும் என்று தருணம் பார்த்திருந்த சக்திகள் அதனைத் தங்கள் நோக்கத்துக்கு ஏற்றவாறு பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்து விட்டன.

நான்காம் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெறாமல் தடைப்பட்டது குறித்தே மக்கள் பெரும் அதிருப்தி கொண்டிருந்தனர். இப்போது இரு சாராருக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியிருப்பதாக சந்திரிகாவே தேவையற்ற ஒரு பயப்பிராந்தியை உருவாக்கி இருக்கிறார்!

## நான்காம் கட்டப் பேச்சுவார்த்தை தாமதமாவதற்கு அதுவும் காரணம்

#### வெளிநாட்டுப் பயணம்

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் திருமதி சந்திரிகா குமாரதுங்கா முதல் முறையாக நாளைய தினம் உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டு டென்மார்க் பிரிட்டன் ஆகிய மேற்கு நாடுகளுக்குப் பயணமாகிறார்.

தமது வெளிநாட்டுப் பயணத்துக்கு முன்னர் தலைவர் பிரபாகரனின் கடிதத்துக்கு அவர் பதில் அனுப்புவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நேற்று வரை விடுதலைப்புலிகளுக்கு எந்த வித பதிலும் வரவில்லை.

தலைவர் பிரபாகரனின் கடிதத்தில் உள்ள குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாகக் கூறிய அதேவேளையில், சமாதான முயற்சிகளில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகவும் கூறியிருந்தார்.

தலைவர் பிரபாகரனின் கடிதம் குறித்து வெளிப்படையாக பாதகமான கருத்தைக் கூறிய அவர், உள்மனதில் சாதகமான பதில் எழுதுவதற்கு உத்தேசித்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் அவ்வாறே எதிர்பார்க்கின்றன.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதில் உண்மையான விருப்பம் உடையவராக இருப்பதால், பேச்சுவார்த்தையில் ஒரு முறுகல் நிலையை அவர் தாமாகவே தோற்றுவிக்க வாய்ப்பில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளவிருக்கும் வேளையில், அத்தகைய ஒரு பாதகமான நடவடிக்கையில் அவர் ஈடுபடமாட்டார் என்றே எதிர்க்கட்சி வட்டாரங்கள் உட்படப் பலரும் நம்புகிறார்கள்.

#### காலதாமதம் ஏற்படும்

எனினும் நான்காம் கட்டப் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்துவதில் பெரும் கால

### அரசியல்

தாமதம் உண்டாகும் என்று நம்பத்தகுந்த கொழும்புத் தகவல் தெரிவிக்கின்றன. அதற்குக் காரணம் பலரும் எதிர்பார்க்கும் இருதரப்புகளுக்கும் இடையேயான கருத்து வேறுபாடோ அல்லது கடித விவகாரமோ அல்ல!

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் அரசாங்கப் பிரதிநிதிகள் குழுவில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற கருத்து நிலை ஒன்று அரசாங்கக் கட்சிக்குள் வலுத்து வருகிறது

இந்தக் குழுவில் அமைச்சர்கள், எம். பிக்கள் இடம்பெற வேண்டும். இப்போது குழுவில் இடம்பெறுவோர் அரசதரப்பில் முடிவு எடுக்கத் தக்கவர்களோ, அல்லது பிரச்சினைக்குரிய விடயங்களை அரசியல் நோக்குடன் அணுகக் கூடியவர்களோ அல்லர் என்று அரசாங்கக் கட்சிக்குள் உள்ள பலரும் கருதுகிறார்கள். அதனை வெளிப்படையாகவும் கூறிவருகிறார்கள் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் அரசாங்கக் குழுவில் மூத்த அமைச்சர்கள் இடம்பெற வேண்டும்; தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்ற குரல் இப்போது உரக்கத் தொனிப்பதாகவும் கூறப்படுகிறது.

சந்திரிகா குமாரதுங்கா பிரதமராக இருந்த வேளையிலேயே முதலாம் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அவர் தமக்கு நம்பிக்கைக்கு உரியவர்களையும், தமது சிந்தனைப் போக்குடன் ஒத்துவரக் கூடியவர்களையும், தாம் சொல்வதைக் கேட்கக் கூடியவர்களையுமே அரசாங்கக் குழுவில் சேர்த்துக் கொண்டார்.

திரு. லயனல் பெர்னாண்டோ சற்றுத் தடம் மாறிச் சென்று விடலாம் என்ற அச்சத்திலேயே அவரைக் குழுவிலிருந்து நீக்கினார்.

மொத்தத்தில், இனப்பிரச்சினை விவகாரத்தில், தாம் தமக்கு நெருக்கமானவர்களுடன் சேர்ந்து வகுக்கும் திட்டத்தைத் தீர்வாக்குவதற்கே சந்திரிகா விரும்பினார். எல்லோரையும் சேர்த்து பல கருத்துகளுக்கு இடம் கொடுத்து முரண்பாடுகளைத் தோற்றுவிக்க விரும்பவில்லை.

#### அமைச்சர்கள் சேர்க்கப்படுவர்

ஆனால் சிக்கலான இன விவகாரப் பிரச்சினையை, கையாள்வதற்கு இப்போதைய அரச குழுப் பிரதிநிதிகள் போதிய தகுதியானவர்கள் அல்லர் என்ற அபிப்பிராயமும் பரவி வருகிறது. அதனால் தமது முந்திய நிலைப்பாட்டை மாற்றி, இரண்டோர் அமைச்சர்களையாவது சேர்க்க வேண்டிய அளவுக்குஜனாதிபதிக்கு அழுத்தம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சந்திரிகாவின் நம்பிக்கைக்கு உரியவரும், அவரை அரசியலில் முன்னுக்குக் கொண்டு வருவதற்குப் பின்னணியில் நின்று உழைத்தவருமான, அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவை அரசாங்கக் குழுவில் சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பு உண்டு என்று அறியப்படுகிறது. வடக்கு புனரமைப்புச் செயலணிக் குழுவின் தலைவராக இவர் நியமிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவருடன் அமைச்சர் தொண்டமான், அஷ்ரப் அல்லது பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா ஆகியோரும் சேர்க்கப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையும் முன் வைக்கப்பட்டுள்ளதாக நம்பிக்கையாகத் தெரிய வருகிறது.

இது விடயத்தில் இன்னும் தீர்க்கமான ஒரு முடிவுக்கு சந்திரிகா வரவில்லை என்றும், வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு வந்தே இது விடயத்தில் அவர் கவனம் செலுத்துவார் என்றும் தெரியவருகிறது.

அது வரையும் நான்காம் கட்டப் பேச்சு வார்த்தைகள் நடைபெறும் சாத்தியம் மிகக் குறைவு. மேலும் வடக்கில் புனர்நிர்மாண, புனரமைப்பு வேலைகளை புலிகளின் ஒத்துழைப்புடன் செய்வதற்கே அரச தரப்பு விரும்புவதாகவும் அறிய வருகிறது.

இப்போது மந்தமடைந்துள்ள அரசியல் பேச்சுக்கள், சந்திரிகா வெளிநாட்டில் இருந்து திரும்பும் இம் மாதம் 14 ஆம் திகதிக்கும், இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவின் கூட்டம் பாரிஸில் நடைபெறவுள்ள ஏப்ரல் 25ஆம் திகதிக்கும் இடையில் மிக வேகமாக முடுக்கிவிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சு வார்த்தை தோல்வி அடையவில்லை. இப்போது தற்காலிகமான ஒரு மந்த நிலையே ஏற்பட்டிருக்கிறது. இதனை இடைக்கால தடையாக நினைத்துப் பேச்சுவார்த்தை முன்னெடுத்துச் செல்லப்படும். அதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன — என்று ஜனாதிபதி வெள்ளிக் கிழமையன்று மஹரகமவில் வைத்துக் கூறியிருப்பது அதனையே எடுத்துச் சொல்கிறது.

இதே வேளை வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குதல், போக்குவரத்துப் பாதையைத் திறந்து விடுதல், மோதல் தவிர்ப்பை போர் நிறுத்தமாக்குதல் ஆகிய விடயங்களில் அரசாங்கம் சாதகமாக நடந்து கொள்ள வேண்டும் என்று சந்திரிகாவின் ஆலோசகர்கள் சிலர் வலியுறுத்தி இருப்பதாகவும் அறிய வருகிறது.

### ஆனால் தற்காலிகத் தடை என்கிறார் சந்திரிகா

எனினும் ..

பூநகரி இராணுவ முகாமை அகற்றக்கூடாது என்ற படைத்துறையினரின் யோசனைக்கு சந்திரிகா ஏற்கனவே ஒப்புதல் அளித்துவிட்டார். ஆகையால் அது விடயத்தில் மேற்கொண்டு மறுபரிசிலனைக்கான சாத்தியம் குறைவு என்று கொழும்பில் அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

சாண் ஏற முழம் சறுக்கும் நிலையை அரசாங்கமே உருவாக்கினால், பேச்சுவார்த்தை வெற்றி அளிப்பதும், தீர்வு ஒன்றுக்கு இணங்கப்படுவதும் எட்டாப் பழங்களாகி, ''சீச்சீ இவை புளிக்கும்'' என்ற நிலையாகி விடுமோ என்று கேட்போருமுளர்!

- உதயகாந்தன் -

★

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## கிழக்கில் படை குவிப்பு; பதுங்குகுழிகளும் அமைப்பு

கிழக்கில் பலப்படுத்தப்பட்டு வரும் இராணுவ முகாம்களில் பெருமளவு படையினரும் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு, கொடுவாமடுவ, கும்புறுமனை, வந்தாறுமூலை, கல்லடி, பூமாஞ்சோலை, இலுப்பையடிச்சேனை, ஆயித்தியமலை ஆகிய இராணுவ முகாம்களிலும், அம்பாறையில் காரைதீவு பொலீஸ் அதிரடிப்படை முகாமிலும் இவ்வாறு அதிக எண்ணிக்கையான படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த முகாம்களில் புதிய பல காவலரண்கள் அமைக்கப்பட்டு வருவதோடு, நிலத்திற்குக் கீழான நகரும் பதுங்கு குழிகளை அமைக்கும் பணியிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். [ஓ-5]

## புலனாய்வு பணியக பொலீஸாரிடம் ஆட்கடத்தல் கோஷ்டி வானுடன் பிடிபட்டது

கொழும்பு, மார்ச். 5

கொழும்பு குற்றப்புலனாய்வு பணியக பொலீஸ் குழு ஒன்று ஆட்கடத்தல் கோஷ்டி ஒன்றை டொயாட்டா ஹைஏஸ் வான் ஒன்றுடன் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்தது.

கிராண்ட்பாஸ், கொட்டாஞ்சேனை மற்றும் தெமட்டகொட பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கொள்ளுப்பிட்டியைச் சேர்ந்த பிரபல வர்த்தகப் பிரமுகர் ஒருவரை இக் கோஷ்டியே கடத்திச் சென்றதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

பல ஆட்கடத்தல் சம்பவங்களை இக் கோஷ்டியே திட்டமிட்டு செய்ததாகப் பொலீஸார் தெரிவிக்கின்றனர். (ஓ-எ)

## வேதங்கள் மிக அநாதியானவை இறைவனின் மூச்சு காற்றும் அவையே

### வேதசிவாகம விழாவில் உரை

வலிகாமம், தெற்கு, மார்ச் 5

வேதங்கள் இறைவனால் சொல்லப்பட்டவை எனக் கூறப்படுவது தவறு. இறைவன் எப்போதிருந்து இருக்கின்றானோ அப்போதிருந்தே வேதங்களும் இருக்கின்றன. இறைவனைப் போல, வேதங்களும் அநாதியானவை, இறைவனின் மூச்சுக்காற்றே வேதம்.

இணுவில் தர்மசாஸ்தா குரு குலத்தில் நடைபெற்ற வேத சிவாகம விழாவில் ஆசியுரை வழங்கிய இந்து மத குரு பீடாதிபதி வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ. ஸ்கந்த சாம்பசிவாச்சாரியார் இவ்வாறு கூறினார்.

இணுவில் காயத்ரீ பீடத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு சிவஸ்ரீ. தா. மகாதேவக் குருக்கள் தலைமை வகித்தார்.

குருபீடாதிபதி சிவஸ்ரீ ஸ்கந்தசாம்பசிவாச்சாரியார் தமது ஆசியுரையில் மேலும் கூறியதாவது:

வேதங்கள் ... பல ... ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவை இறந்துவிடவில்லை. வேதங்களை அவற்றுக்குரிய அளபெடையோடு ஓத வேண்டும்.

வைதீகத்தின் உட்பொருளை விளங்கிக் கொள்ளாமல் பலர் கிரியைகளை நடத்துகின்றனர்

வைதீகத்தின் உட்பொருளை விளங்கிக் கொள்ளவும், வேதங்களை அளபெடையோடு ஓதவும் அந்தணர்களுக்கு குருகுலக் கல்வியை கொடுத்துக்கொண்டிருக்கும் தர்மசாஸ்தா குருகுலம் வேதங்கள் பற்றிய தெளிவுகளை பெறச்செய்ய கருத்தரங்குகளை நடத்த வேண்டும் என்றும் கூறினார்.

சிவஸ்ரீ. தா. மகாதேவக் குருக்கள் தமது தலைமையுரையில் —

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது அந்தணர்கள் ஆண்டுகொண்டிருப்பவர்களாகத் தெரிந்தாலும், அவர்களின் உள்வாழ்வை உற்றுக் கவனித்தால் அவர்கள் ஆளப்படுபவர்களாக விளங்குவது தெரியும். ஏழ்மையும், கஷ்டமும் நிறைந்த அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர வைக்கவேண்டும். ஒற்றுமைக்கும் இந்துமத வளர்ச்சிக்கும் இந்துமத ஒன்றியத்தை நாம் நம்பி செயல்படுகிறோம் எனக் கூறினார்.

வேதங்கள் பற்றி சிறப்புரையாற்றிய யாழ். பல்கலைக்கழக தமிழ்துறையைச் சேர்ந்த கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் கூறியதாவது:

வேதங்களில் பல செப்பனிடப்படாத விடயங்கள் உள. சமய சம்பந்தமாக மட்டுமல்ல, சித்த வைத்தியம், இசை, நாட்டியம், சிற்பம் ஆகிய பல துறைகள் சம்பந்தமாகவும் அவற்றில் உள்ளன. அவையெல்லாம் இன்றைய தேவைக்கு ஏற்ப செப்பனிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். ஆலயத்துக்கு மட்டுமல்ல சமுதாயத்துக்குரியதாக வேதங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.

வேதங்களில் காணப்படும் வானியல், மருத்துவம் போன்ற அறிவியல் விடயங்களை ஆராயவென மகாநாடுகள் கூட்டப்பட வேண்டும்.

வேதத்துடன் சேர்த்து உபநிடதங்களையும் பாராயணம் பண்ணி தேவையான இடங்களில் பயன்படுத்த வேண்டும். இப்படி அவர் கூறினார்.

பிரம்மஸ்ரீ கே. சீதாராம சாஸ்திரிகள், கி. நாராயண சாஸ்திரிகள், ச. குமாரசாமிக் குருக்கள், ஐ. கைலாசநாதக் குருக்கள் ஆகியோர் பற்றிய நினைவு பேருரைகளும் விழாவில் இடம்பெற்றன.

சிவஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ சாமி சுந்தரேசக்குருக்கள் சிவஸ்ரீ. முத்து ஐயந்திநாதக்குருக்கள் ஆகியோர் ''சிவாகம கிரியா தத்துவ நிதி'' என்ற பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்பட்டனர்.

இந்துமத குருமார் ஒன்றியத்தின் சார்பாக ''மஹாசிர்வாத'' நூல் வெளியிடப்பட்டது.

இந்து மதகுருமார் ஒன்றிய தலைவர் சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள் சிவஸ்ரீ. சாம்பசிவ சோமசபேசக் குருக்கள், பிரம்மஸ்ரீ. சாம். சோமாஸ்கந்தசர்மா, பிரம்மஸ்ரீ பா. சர்வேஸ்வரசர்மா ஆகியோரும் விழாவில் உரையாற்றினர். (க-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி

கோப்பாய் மத்தி அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்

தரும பரிபாலன சபை

## பொதுக் கூட்ட அறிவித்தல்

காலம்:- 18.03.1995 சனிக்கிழமை பி. ப. 3.30 மணி

இடம்:- டை ஆலய மண்டபம்

★ நிகழ்ச்சி நிரல் ★

1. இறை வணக்கம்
2. தலைமை உரை
3. பரிபாலன சபைக்கான யாப்பு வாசித்து பொதுச் சபையினால் அங்கீகரித்தல்
4. பரிபாலன சபை உறுப்பினர்கள் தெரிவு
5. பிற விடயங்கள்
6. இறை வணக்கம்.

குறிப்பு:-

17.03.1995 முன் புதிய அங்கத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். சேர விரும்பும் அங்கத்தவர்கள் பொருளாளர் திரு. து. தனபாலசிங்கம் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| ஆயுட்கால அங்கத்தவர் | — | 100 ரூபா |
| வருட அங்கத்தவர் | — | 25 ரூபா |

செலுத்தியோர் மகாசபை உறுப்பினர்கள் ஆவர்.

இடைக்கால பரிபாலன சபை.

[35518]



## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

கோப்பாய் பிரிவு

## பின் போடப்பட்டுள்ளது

இன்று ஞாயிற்றுக்கிழமை (5-03-95) மேற்படி பிரிவினால் நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் பின் போடுவதென செயற்குழு தீர்மானித்துள்ளது. அதிர்ஷ்டம் பார்க்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இ. மயில்வாகனம்
கௌரவ செயலாளர்.

[சி-719]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்துரை பாக்கியம்

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த திருமதி சின்னத்துரை பாக்கியம் நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், புனிதவதி, தம்பித்துரை, மணியம் [யா / வயாவிளான் ம. ம. வி.), சிவலிங்கம் [ஜேர்மனி], கனகரத்தினம் [எகிப்து] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, மற்றும் தேவமலர், பரமேஸ்வரி, சாந்தினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்லையா, முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவராசா [சுவிஸ்], தவராணி [ஜேர்மனி], தவமணி, ராகினி, மயூரன், மைதிலி, மகிந்தன், சிவரூபன், சிவதர்சினி, சிவரூபி, சுபாகரன், சிவாசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (5-3-95) மு. ப. 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. மணியம்
[மகன்]

[35519]

### வேலாயுதம் பரமலிங்கம்

(நயினாதீவு)

வேலாயுதம் பரமலிங்கம் கொழும்பில் காலமானார்

இவர் காலஞ்சென்றவர்களான திரு திருமதி வேலாயுதம் தம்பதிகளின் அன்பு மகனாரும், பராசக்தியின் அன்புக் கணவரும், கமலாதேவி, நவலெட்சுமி, கந்தசாமி, சகுந்தலாதேவி, புஸ்பராணி, திலகமலர் தவராசா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுந்தரம்பிள்ளை, சுந்தரலிங்கம், சண்முகலிங்கம், தியாகராசா, சண்முகநாதன், இந்திராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வீரவாகு, கமலாம்பிகை, வள்ளிப்பிள்ளை கனகரெத்தினம், அருடபிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிருஷ்ணசாமி, காலஞ்சென்ற கணேசராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கந்தையா நல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கி கிருபானந்தா
(மருமகன்)

538/7, கண்டி வீதி,
அரியாலை

(35520)

### திருமதி
### ஞானசவுந்தரி பத்மநாதன்

வீமன்காமம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் தற்போது கோப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி ஞானசவுந்தரி பத்மநாதன் நேற்று (4-3-95) காலமாகி விட்டார்.

இவர் பத்மநாதனின் மனைவியும், சுமதி, பிரேம்குமார் (இ. மி. சபை அநுராதபுரம்) கீதா, ரட்ணகுமார், சுகுணா ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
P. ரட்ணகுமார்
(மகன்)

கோப்பாய்மத்தி

(35517)

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 892/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05-03-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# புதிய நாடு ஒன்றை கட்டி எழுப்பும் பணியிலே கலை இலக்கியவாதிகளும் பங்களிக்க வேண்டும்

## கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், மார்ச். 5

ஒரு தேசத்தின் ஆன்மா கலை இலக்கியங்களே. இவற்றில் வாழ்வியலின் பண்புகளும் தன்மைகளும் அடங்கியுள்ளன.

படைப்புக்களின் சிகரமாக விளங்குவது மனித வாழ்வு. அது எவ்வாறு அமைய வேண்டும் என்று படைப்புகள் சொல்ல வேண்டும்.

தமிழர்களின் வீரத்தைப் பறைசாற்றக்கூடியதான புத்தம் புதிய நாட்டைக் கட்டி எழுப்பும் பணியில் கலை, இலக்கியவாதிகள் போராளிகளுடன் இணைந்து செயற்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகத் தலைவர் வண. பிதா பிரான்சிஸ் யோசெப் அடிகளார்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும், "வெளிச்சம்" சஞ்சிகையும் இணைந்து நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடத்தும் கலை, இலக்கியக் கருத்தரங்கின் இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சிக்கு தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடிகளார் தமது தலைமையுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கம்பனுக்கு அயோத்தியும் வீரமாமுனிவருக்கு ஜெருசலமும் போன்று போராளி கப்டன் மலரவனுக்கு தமிழீழம் இலட்சிய நகராக விளங்கியது. இந்த மண் எங்கள் சொந்த மண் என்று போராளிகள் சிந்தித்தனர்.

வாழ்வியல்

மனிதன் தனி மனிதனாக அல்ல, கூட்டாக, சமுதாயம் என்னும் தோப்பில் வளர்ந்து தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்வது சிறப்புத் தருவதாகும்.

வாழ்வியல் எனும்போது, அது மனித இயலும் ஆன்மீக இயலும் சேர்ந்ததே. மனித வளர்ச்சிக்குத் தேவையான சமூக வளர்ச்சிக்கு வாழ்வியலில் சமூக ஆன்மாவும் இன்றியமையாதது ஆகும்.

மனித அடிப்படைத் தேவை போல் ஆன்ம தாகத்தைத் தீர்க்கும் அடிப்படை உரிமை, தன்மானம், சுதந்திரம் என்பனவும் அவசியம்.

ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களின் ஆன்ம வழிபாடு, கல்வி, கலைகள் ஆகியன அழிக்கப்பட்டால் சமுதாய வளர்ச்சிக்கு சாவுமணி அடிக்கப்படும் — என்றார்.

விடுதலைக்கான விழுமியம் தேவை

விடுதலைப்புலிகள் பிரமுகர் வே. பாலகுமார் பேசும்போது கூறியதாவது:-

ஒருவன் தனது இருப்பைப் பிரகடனப்படுத்த நியாயப்படுத்தக்கூடியதாக கலை இலக்கியப் படைப்புகள் அமைய வேண்டும் உலகத்தின் உன்னத இலக்கியம், திரைப்படம், ஓவியம் என்பன அடக்குமுறை, ஒடுக்குமுறைகளுக்கு எதிராகத்தான் எழுந்தன. எமது போராட்டம் வியக்கத்தக்க உயரிய ஈகைத் தன்மையுள்ள போராட்டம் ஆகும். கரும்புலிகளின் ஈகம் மக்கள் மனதில் மோதிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாங்கள் எவரையும் எழுதும்படி நிர்ப்பந்திக்கவில்லை. எனினும் வானதி சொன்னது போல், "என்னால் எழுதப் படாதவைகளை, எழுத முடியாது போனவற்றை எழுதுங்கள்" என்று கேட்கிறோம். நாவல் இலக்கியம் போராட்டத்தைப் படைப்பதில்லை. போராட்டம் சார்ந்த நிலைப்பாடுகளைப் படைப்பதாகும். புரட்சிகரமான சூழலும் தியாகமும் நம்மிடம் உண்டு உளவியல் தேடல் தேவையாக இருக்கிறது, விடுதலைக்கான விழுமியங்கள் உங்கள் எழுத்துக்களில் அமையவேண்டும். அதற்கு இந்தக் கருத்தரங்கு வழியமைக்கவேண்டும் — என்றார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், கவிஞர் முல்லைமணி, கலையரசு ஏ.ரி. பொன்னுத்துரை திரு. ஐ. சாந்தன் ஆகியோரும் காலை நிகழ்ச்சியின் போது கருத்துரை வழங்கினார்கள்.

ஈழநாதம் ஆசிரியர் திரு. ஜெயராஜ் பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் திரு. ராஜன் பூபாலசிங்கம் ஆகியோர் மங்களவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்கள். (அ-க-111)

### பல்கலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட மாணவர்கள் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவுக்கு விலாசமிடப்பட்ட மகஜர் ஒன்றும் பேரணியின் முடிவில் யாழ். அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்படும்.

நேற்றுப் பிற்பகல் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பாதிக்கப்பட்ட மாணவர்களின் கூட்டத்தில் பேரணி நடத்துவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

1993 ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டி ஏற்பட்டது.

ஆனால் அவர்கள் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியிருக்க வேண்டும்.

இதன் மூலம் அவர்கள் தமது உயர்கல்வியை இரண்டரை ஆண்டுகளுக்கு பதிலாக ஒன்றரை ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்யும் நிலை ஏற்பட்டது என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தமிழ் மாணவர்களின் கல்வித்துறையில் இது போன்ற அநீதிகள் தொடர்ந்து இழைக்கப்பட்டு வருவதால் இதனை ஒரு முடிவுக்குக் கொண்டுவரக் கோரி நடத்தப்படவுள்ள அந்தப் பேரணியில் பாதிக்கப்பட்ட மாணவர்களுடன் ஏனைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மாணவர் குழு அழைப்பு விடுத்துள்ளது. (ஜ 14-5)

### விடுதலை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் அனுப்பி விட்டோம். எனினும் அவர்களிடமிருந்து இதுவரை பதில் ஏதும் வரவில்லை.

இந்தக் கடிதத்தையும் விடுதலைப் புலிகள் மூலம் அனுப்பி வைக்க உள்ளோம். இந் நிலையில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் கூட எம்மை வந்து பார்க்கவில்லை. எனினும் எமது போராட்டம் தொடரும் ஓர் முடிவு கிடைக்கும் வரை— என்றார். (ஜ-9)

### பேச்சுக்கள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா, ஜனாதிபதியின் செயலாளர் குசும்சிறி பாலபட்டபெண்டி, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா, பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா ஆகியோரும் அமைச்சருடன் கூடச் சென்றிருந்தனர்.

இராணுவத்தினர் மத்தியில் அமைச்சர் ரத்வத்த உரையாற்றினார்

அப்போது அவர் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வைக் காண்பது தான் அரசாங்கத்தின் நோக்கமாகும். நாட்டின் ஒற்றுமை ஐக்கியம் ஆகியவற்றை பாதுகாப்பதன் மூலம் ஜனநாயக முறையில் இந்த மோதலுக்கு தீர்வு காணப்படும்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளை பாதுகாப்பதன் மூலம் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டுவது தான் ஜனாதிபதியின் ஒரே ஒரு அபிலாசையாகும்.

அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளை சீர்குலைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே பொலிஸாரும் ஆயுதப் படையினரும் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

அதுமட்டுமன்றி —

இப்போதைய பேச்சுவார்த்தைகள் தோல்வி காணும் பட்சத்தில் ஆயுதப் படைகள் போருக்கு தயாராக இருக்க வேண்டும்.

பேச்சுவார்த்தைகள் தப்பித் தவறி தோல்வி கண்டால், அதற்கு பின்னர் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு ஆயுதப் படைகளுக்கு என்னென்ன தேவைப்படுகின்றனவோ அவை அனைத்தையும் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது. — என்று தெரிவித்தார். (அ-4)

### படுக்கையை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. மிகவும் பலவீனமான நிலையில் அவர்கள் காணப்பட்டனர்.

—சிலருக்கு தொடர்ந்து வயிற்றோட்டம் ஏற்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

நான்கு நாட்கள் கடந்த பின்பும் அரசிடமிருந்து பதில் எதுவும் கிடையாதது குறித்து அவர்கள் அனைவருமே கவலை தெரிவித்தனர்

அரசு தமது வேண்டுகோளை உதாசீனம் செய்யுமானால் திட்டமிட்டபடி எதிர்வரும் 7 ஆம் திகதி எதுவித ஆகாரமும் இன்றி தமது உண்ணா விரதத்தைத் தொடரப் போவதாகவும் அவர்கள் கூறினர். (ஜ-9)

### சமாதானப் பேச்சு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேடைக்கு வந்து ஜனநாயக ரீதியில் பேச்சுவார்த்தை நடத்தி அந்த நாட்டு அரசியலிலும் பிரவேசித்திருக்கிறார்கள். இந்த நிலை இலங்கையிலும் சாத்தியமாகும்.

இப்படி ஜனாதிபதி கூறினார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் சக்தியுடன் இயங்கி வருகின்றது என்றும் ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சற்று மந்த நிலையில் செயல்பட்டு வருகிறது என்றும் ஜனாதிபதி [illegible] கூறினார்.

(ஜனாதிபதி உரையின் சில பகுதிகள் நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தன) (இ-4)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். போதனா வைத்திய சாலை விளையாட்டுக்கழக அணிக்கும் உடுப்பிட்டி கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் கொற்றாவத்தை கலைவாணி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலை விளையாட்டுக்கழக பி. அணிக்கும் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் உதைபந்தாட்டம் இடம்பெறும். (ஒ-15)

★ ★ ★

யாழ். பிரதேச செயலக பிரிவு உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப்போட்டி இன்று பிற்பகல் 4 மணிக்கு குருநகர் பாடும்மீன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிப்போட்டியில் நாவாந்துறை சென். நீக்கலஸ் வி. க அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் வி. க அணி மோதும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சபை செயலாளர் திரு. க. முருகநேசனும், கௌரவ விருந்தினர்களாக புனித யாக்கப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்திரு நேசநாயகம் அடிகளாரும் இளைப்பாறிய விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் திரு எஸ். மரியதாஸும் கலந்து கொள்வர். (இ)

## வரலாறு நூல் வெளியீடு

சுன்னாகம், மார்ச் 5

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலய சமூகக் கல்வி மன்றமும், விவசாயக் கழகமும் வழங்கும் வரலாற்று நூல் வெளியீடும் விவசாயப் பரிசில் அளிப்பும் இன்று ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

வைபவத்துக்கு அதிபர் திரு. சு. துரைசிங்கம் தலைமை வகிப்பார். (இ)

## வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

சண்டிலிப்பாய், மார்ச் 5

சங்கானை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் 14 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளன.

### லலித்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயகண்ணு சத்தியசீலன் என்பவர் யாழ்ப்பாணத்துக்கு தப்பிச் சென்றுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் "லங்கா தீப" பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். (ஐ-6)

## நெல்லின் உத்தரவாத விலை

கொழும்பு, மார்ச். 5

அரசாங்கம் நெல்லின் உத்தரவாத விலையை அதிகரித்துள்ளது.

நெல்சந்தைப்படுத்தும்சபை இனி மேல் ஒரு கிலோ கிராம் நெல்லை 7 ரூபா 42 சதமாகக் கொள்வனவு செய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## நினைவு நாள் அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. க. முத்துவேற்பிள்ளையின் நினைவு நாள் அஞ்சலிக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 8.15 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் திரு. செ. கேசவராஜன் கூட்டத்திற்கு தலைமை வகிப்பார். (இ)

## ஐ.தே.கவின் தலைமைக்கு எதிராக கட்சிக்குள் சதி

கொழும்பு, மார்ச். 5

கட்சியின் தலைமைத்துவத்தை மாற்றுவது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று ரகசியமாகச் சந்தித்து பேச்சு நடத்தி வருவதாக சிறிகோத்த" வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காமினி திஸாநாயக்காவின் கொலையை அடுத்து ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்த சமயம் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவு தற்போது மீண்டும் தோன்றியிருப்பதாகவும்—

கட்சித் தலைமையை மாற்ற வேண்டும் எனக் கோரி வரும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு காமினி திஸாநாயகாவின் ஆதரவாளர்களும், புதிதாக நியமனம் பெற்ற ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்களும் முழு ஆதரவை வழங்க முன் வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-6]


உ

ஓம் சாயி ராம்

## திருமண நன்றி நவிலல்

பகவான் அருளால் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் 02-03-95 வியாழக்கிழமை இடம்பெற்ற எங்கள் மகனின் திருமண வைபவத்தில் கலந்து சபையைச் சிறப்பித்து, ஆசீர்வதித்த சாயி அடியார் அனைவருக்கும், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது சார்பிலும், மணமக்கள் சார்பிலும் அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்

திரு. திருமதி சர்வானந்தா குடும்பம்

359/36 நல்ல லக்சுமி அவென்யூ
சாயி இல்லம்,
நல்லூர்,

[35516]



## JAFFNA COLLEGE

### ANNUAL PRIZE GIVING DAY

Will be held in the Quadrangle of the College on Thursday 16th March, 1995 at 5-00 p. m.

Chief Guests:

Dr. N. ETHIRVEERASINGAM
(Lecturer, University of Jaffna.)

and

Dr. Mrs. CHANDRA AMBALAVANAR
(Medical Superintendent, Green Memorial Hospital)

will Distribute the Prizes

Parents. Alumni and Friends are Cordially Welcome

G. Rajanayagam,
Principal.

Vaddukoddai
05 - 03 - 1995

[C-602]



## JAFFNA MEDICAL ASSOCIATION

LECTURE BY:

Dr. Eswaran Vellauthapillai
FFARCS
Consultant Anaesthetist, U. K.

ON

'Respiratory Failure'

On 6th March 1995 (Monday)

Venue Nurses Training School, Jaffna.

Time: 6 p.m.

Medical Library
Gen. Hospital
(Teaching)
Jaffna.

DR. T. RAJAJANE,
Hony. Secretary J.M.A.

(8371)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org